# "இங்கிருந்து புறப்பட எம்மால் முடியவில்லை"


Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 12
இதழ்: 34
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பங்குனி 3 முஹர்ரம் 7 திங்கட்கிழமை [16-3-70]



பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்



டொலர் கோர்ப்பரேஷன்


## அப்பல்லோ-12 வீரர்கள் இலங்கைக்கு புகழ்மாலை

### இன்று ரங்கூன் விஜயம்

கோட்டை, திங்கள் இலங்கை மக்களின் உற்சாகமான வரவேற்பும் இலங்கையின் எழில்மிகு காட்சிகளும் எங்கள் இதயங்களை கவர்ந்துள்ளன, இலங்கையைவிட்டு வெளியேற எங்களால் முடியவில்லை,

இவ்வாறு இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அப்பல்லோ-12 விண்வெளி வீரர்கள் வெளியிட்ட அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளனர், விண்வெளி வீரர்களை வரவேற்பதற்காக மக்கள் வெள்ளம் திரளாக குவிந்திருந்தமையை குறிப்பிட்ட விண்வெளி வீரர்கள் ஏனைய நாடுகளில் தமக்களிக்கப்பட்ட வரவேற்பிலும் பார்க்க இலங்கை மக்களின் வரவேற்பு அதிகமாக இருந்ததாக கூறினர்,

வீரர் அலன்பீன் இலங்கை பற்றிக் குறிப்பிடுகையில் பார்க்குமிடமெங்கும் பசுமையான சோலைகளும் அழகிய மரங்களும் இன்பத்தை ஊட்டுகின்றன, இங்குள்ள மக்கள் பொதுவாக ஆரோக்கியமுள்ளவர்களாகவுள்ளனர் என்றார்,

சார்ள்ஸ் கொன்ருட இலங்கை மக்களின் உற்சாகத்தைப் பார்க்கும் போது இன்னும் ஒருமாத காலத்துக்கு இலங்கையிலேயே தங்கியிருக்கலாம் என்ற எண்ணத்தையே எமக்குண்டாக்கின்றன'' என்றார்.

ரிச்சார்ட் கோர்டன் 'இலங்கை மிகவும் அழகான இடம்' என்றார்.

திருகோணமலையில் நேற்று ஓய்வு எடுத்துக்கொண்ட இவர்கள், அமெரிக ஜனாதிபதி திரு. நிக்ஸனின் விசேட ஜெட்விமானத்தில் உலக சுற்றுப் பிரயாணத்தின் அடுத்த பிரயாணத்தை மேற்கொண்டு, ரங்கூனுக்கு இன்று காலை புறப்பட்டுச் செல்வர்.

## அம்புலியில் 10 அடி ஆழமான கிடங்கு தோண்டப்படும்

### அப்பல்லோ-13 ஏப்ரல் 11ல் புறப்பாடு

அப்பல்லோ-13 விண்வெளிக் கப்பல் வருகிற ஏப்ரல் மாதம் 11-ம் திகதி கேப் கென்னடியிலிருந்து புறப்பட்டுச் செல்லவிருக்கிறது

அம்புலியில் தரை இறங்கும் நிலாவாகனத்துக்கு 'ஒடிசி' என்றும், தாய்கப்பலுக்கு 'அக்கோடியஸ்' என்றும் பெயரிடப்பட்டுள்ளது. கிரேக்க இதிகாசங்களை இயற்றிய இருவர்களில் ஒருவரான 'ஒடிசி' என்பவரின் பெயரே நிலா வாகனத்துக்குச் சூட்டப்பட்டுள்ளதாகவும், நைல்நதியுடன் சம்பந்தப்பட்ட மற்றொரு பெயரான 'அக்கோரியஸ்' என்பதை தாய்க்கப்பலின் பெயராக இடப்பட்டுள்ளதென்றும் ஹஸ்டனிலிருந்து நேற்று அறிவிக்கப்பட்டது

அப்பல்லோ-13-ல் காப்டன் லோவல் உடன் இன்னும் இருவர் பிரயாணஞ் செய்வர்

#### 10 அடி தோண்டப்படும்

10 அடி ஆழத்துக்கு நிலாத்தரைதோண்டப்பட்டு, நிலாதரையில் உள்ள பாறைகள் பூமிக்கு கொண்டுவரப்படும்: அப்பல்லோ 13 இறங்கும் இடத்திலிருந்து 4500 அடி தூரம் வரை சென்று எரிமலைகளில் உள்ள பலம் வாய்ந்த கற்பாறைகளை அவர்கள் பூமிக்கு எடுத்து வருவர்.

எரிமலையில் உயர்ந்த பிரதேசப் பகுதியில் உள்ள கற்கள் சரியாகப் பரிசோதனை செய்யப்பட்டால் பூமி சூரியன் ஏனைய கோள்கள் பற்றிய தோற்றங்கள் காலங்கள் பற்றிய தகவல்களை சரியாக அறிந்துகொள்ளமுடியுமென விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்,

#### ஓய்வு பெறுவார்

1968ம் ஆண்டு அப்பல்லோ 8-ல் சென்று அம்புலியை வலம் வந்த கப்டன் லேவல் மற்றவர்களுக்கு சந்தர்ப்பம் கொடுக்க வேண்டுமென்பதற்காக அப்பலோ-1? க்கு பின்னர் அம்புலிப் பயணத்தை மேற்கொள்ள மாட்டாரென நேற்றுநடை பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் கூறியுள்ளார்.

### மட்டுவில் அம்மன் கோவில் உற்சவம்

# பொங்கல் இன்று ஆரம்பம்; நீதிமன்றத்தில் மனுவிசாரணை

## குழப்பம்விளைவிப்போரை கைது செய்யும்படி உத்தரவு

யாழ்ப்பாணம் திங்க

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் இன்று ஆரம்பமாகின்றது. சில தினங்களுக்கு முன்னர் இந்த ஆலயத்தின் கதவுகள் ஆசாரசீலராக வரும்எவரும் உள்ளே சென்று வணங்குவதற்காகத் திறந்து விடப்பட்டது. இதுசம்பந்தமாக சாவகச்சேரி மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட இரு மனுக்கள் மீது இன்று விசாரணை செய்யப்படவிருக்கிறது, கோவில் கேணிக்கு எவரும் போக முடியாதென்றும் பைப்மூலம் வழங்கப்படும் தண்ணீரைப் பெற்று கோவில் வீதிகளில் வழக்கம்போல் வெளியே பொங்கலாமென் ஒரு பொலிஸ் அதிகாரி கூறினார்.

சமூக குறைபாடுகள்ஒழிப்புச் சட்டத்தின் படி, அந்தச் சட்டத்தை மீறும் எவர் மீதும் நடவடிக்கை எடுக்கவும், அமைதிக்குப் பங்கம் விளைவிப்போர் மீதும் நடவடிக்கை எடுக்கவும். தங்களுக்கு அதிகாரமிருப்பதாக

ஆசாரசீலர்களாக ஆலயத்துக்குவரும் எவரும் உள்ளே சென்று வழிபடலாமென ஆலயத்தின் தற்போதைய மனேசர் சமீபத்தில் அறிவித்திருந்தார். அதைத்தொடர்ந்து சிறுபான்மைத் தமிழர்கள் சிலர் ஆலயத்துள் சென்று வழிபட்டனர். இதன்காரண

பதி நேற்றுமுன்தினம் புதிய மனேச்சருக்கு ஓர் இடைக்காலத்தடை உத்தரவு பிறப்பித்தார் ஆலயக்கதவுகளை சகலருக்கும் திறந்துவிடக் கூடாதென்பதே இந்த இடைக்கால உத்தரவாகும்.

#### கோர்ட்டில் இன்று ஆஜர்

மோத

## வங்காள அரசு வீழ்ச்சியடையும்

புதுடில்லி, மார்ச் 16

மேற்குவங்காள ஆட்சி வீழ்ச்சியடையும் நிலையில் உள்ளது.

மேற்குவங்காள 3 அமைச்சர்கள் தமது பதவியிலிருந்து இராஜினாமாச்செய்ததிலிருந்து கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் 16 கட்சிகள் சேர்ந்து அமைக்கப்பட்ட கூட்டரசாங்கம் வீழ்ச்சியடையும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் ஆயினும் அங்கு வேறு அரசாங்கம் அ[illegible]ப்பதற்கான திடமான தி[illegible]ம் எதுவும் தம்மிடம் இல்லையென்றும் பாரதப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி கூறியுள்ளார்.

3 அமைச்சர்களின் [illegible] [illegible]கங்கள் கேரள முதன்

## 'என்மகனை 1-ம் எதிரிக்கு கடைபோட்டுக் கொடுத்தேன்'

### பருத்தித்துறை நகைவியாபாரி கொலை வழக்கு விசாரணை

வல்வெட்டித்துறை, ஞாயிறு

'முதலாம் எதிரியான இராமச்சந்திரன் எனது மகன். அவர் என்னுடன் எனக்குச் சொந்தமான நெல்லியடியிலுள்ள நகைப்பட்டறையில் 68-ம் ஆண்டுவரை வேலை செய்து வந்தார். பின்னர் அவருக்கு கரவெட்டியில் என் செலவில் நகைப்பட்டறை ஒன்று போட்டுக்கொடுத்தேன்.

பின்னர் அச்சைக்கிளை 1400 ரூபாவிற்குவிற்றேன். அதில் ரூபா 250 சயிக்கிள் திருத்தப்பட்ட கூலியாகக்கொடுத்தேன். மிகுதி ரூபா 1150 என்னிடமிருந்தது. அப்பணத்தை சி. ஐ. டி. பொலிசாரிடம் ஒப்படைத்தேன்.

சிவசுப்பிரமணியநாதன் பொ பத்மநாதன் ஆகியோரும் சாட்சியமளித்த பின் மேல்விசாரணை இம்மாதம் 21ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பருத்தித்துறை நகைவியாபாரி கொலைவழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. வி[illegible]னராசா[illegible]ன்

### மின்சாரத்தடை

யாழ்ப்பாணம், திங்.

## 'திட்டமிட்ட குடியேற்றத்தால்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சட்டத்தை மீறும் எவர் மீதும் நடவடிக்கை எடுக்கவும், அமைதிக்குப் பங்கம் விளைவிப்போர் மீதும் நடவடிக்கை எடுக்கவும். தங்களுக்கு அதிகாரமிருப்பதாகவும் தாங்கள் தங்கள்கடமையைச் செய்யத் தயாராக இருப்பதாகவும் உயர்தர பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவில் வருடாந்த உற்சவம் இன்று காலை ஆரம்பமாகின்றது. இவ்வருடம் வழமைபோல் பூசை நடைபெறுமென்று புதிய மனேஜரான திரு செ. சிவகுரு அறிவித்திருக்கிறார் கோவில்வீதிகளில் வழக்கம்போல் பொங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. பொங்குவதற்கு தண்ணீர் பைப்மூலம் வழங்குவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. கேணியில் எவரும் தண்ணீர் எடுக்க முடியாதென்றும் ஆலயக்கதவுகள் கடந்த 3ம் திகதி தொடர்கம் திறந்துவிடப்பட்டிருப்பதாகவும் பொலிஸ் அதிகாரி ஒருவர் நேற்று தெரிவித்தார்.

கடந்த வருடம் இரண்டாவதுகிழமை உற்சவத்தின் போதுஏற்பட்டகலவரத்தை தொடர்ந்து வீதிகளில் எவரும் பொங்குவதற்கு அனுமதிக்கப்படவில்லை கடந்த வருடம் வருடாந்த உற்சவம் ஆரம்பமாவதற்கு முன்னரே கோயில் கதவு பூட்டப்பட்டுவிட்டதால் பூசைகள் நடைபெறவில்லை.

எவ்வித வேறுபாடுமின்றி ...

... ஆலயத்தின் தற்போதைய மனேசர் சமீபத்தில் அறிவித்திருந்தார். அதைத்தொடர்ந்து சிறுபான்மைத் தமிழர்கள்சிலர்ஆலயத்துள்சென்று வழிபட்டனர். இதன்காரணமாக இந்த ஆலயத்தின் மனேஜரில்ஒருவரான புதிய மனேஜர் செய்ததுசரியல்லவென்றும், ஆலயக்கதவுகளை உடனடியாக மூடிவிடும்படி உத்தரவிடும்படி சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார். இந்த மனுவின்மீது ஆலயக் கதவுகளை பூட்டும்படி நீதிபதி உத்தரவிட்டிருந்தார். இதே நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்ட மற்றொருமனுமீது சாவகச்சேரி மாவட்ட நீதி...

... பித்தார் ஆலயக்கதவுகளை சகலருக்கும் திறந்துவிடக்கூடாதென்பதே இந்த இடைக்கால உத்தரவாகும்.

### கோர்ட்டில்இன்று ஆஜர்

சாவகச்சேரி மாவட்டநீதிமன்றத்தில்தாக்கல்செய்யப்பட்ட மனுவைத் தொடர்ந்து இன்றுகாலை கோயில் மனேஜர்களான சின்னப்பபசிவகுரு, சின்னப்பாசெல்லத்துரை புறக்டர் கே. கதிர்காமசேகரர் சாவகச்சேரி பொலிஸ் அதிபர் திரு கே. துரைசிங்கம் ஆகிய நால்வரையும் ஆஜராகும்படி நீதிபதி உத்தரவிட்டிருந்தார். இன்றுகாலை இந்த மனு

(4-ம் பக்கம் பார்க்க)



... ம் எதுவும் தம்மிடம் இல்லையென்றும் பாரதப்பிரதமர் திருமதிஇந்திராகாந்தி கூறியுள்ளார்,

3 அமைச்சர்களினதும் ... கங்கள் கேரள முதன் மந்திரியினால் கவர்னருக்கு அனுப்பி வைககப்பட்டுள்ளன,

......

## செனட் 18-ல் கூடும்

கொழும்பு, ஞாயிறு

செனட்சபை இம்மாதம் 18-ம் திகதி கூடவிருக்கிறது. எதிர்கட்சியினர் மகாவலி மசோதா பற்றிசெனட்சபையில் நீண்ட நேரம் பேசவிருப்பதாகவும் அதுபற்றி தீர்க்கமான முடிவை தாங்கள் எடுக்கவிருப்பதாக எதிர்க் கட்சி செனட் உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

ஆட்சிமன்றத்தில் இம்மசோதா ஆண்மையில் விவாதிக்கப்பட்ட போது குழப்பம் ஏற்பட்டதும், நீண்ட நேரமாக எதிர்கட்சி எம். பிக்கள் இங்கு பேசியதும் தெரிந்ததே. (சி. பி ஏ)

... ஒன்று போட்டுக்கொடுத்தேன்.

பருத்தித்துறை நகைவியாபாரி கொலைவழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. வி...ராசா... முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டபோது க. சபாரத்தினம் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கில் அல்வாய் தெற்கைச் சேர்ந்த ச. இராமச்சந்திரன், நெல்லியடியைச் சேர்ந்த செ. நடராசா ஆகிய இருவரும்68-ம்ஆண்டு நவம்பர் மாதம் 3-ந் திகதி பருத்தித்துறை நகைவியாபாரியான எம். எம். சுல்தான் மொகதீன் என்பவரை கொலைசெய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

சபாரத்தினம் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது; 1-ம் எதிரி கரவெட்டியில் தனது கடையில் சிலவேளை தங்குவார். சிலவேளை வீட்டில் வந்து தங்குவார். எனது மகனை 1-ம் எதிரி இன்ஸ்பெக்டர் செல்லையாவிடமிருந்து ஒருமோட்டார் சைய்க்கிள்வாங்கினர். ஆனால் அச்சய்க்கிள் என்னுடைய பெயரில் இருந்தது அவர் அதனைப்பாவிப்பார்.

... மேல்விசாரணை இம்மாதம் 21ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## மின்சாரத்தடை

யாழ்ப்பாணம், திங்.

கடந்த இரு தினங்களாக நல்லூர் பகுதியில் மின்சாரம் தடைபட்டுள்ளதால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதுபற்றி மாநகரசபைக்கும் மின்சார இலாகாவினருக்கும் அறிவிக்கப்பட்டதாகவும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்றும்கூறப்படுகிறது

## இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரனின் 13-ந் திருவிழாவான இன்று மாலை 6—7-30 வரை திரு வி. நல்லையா அவர்கள் 'அன்புக் கடலும் அருள் கடலும் சந்திப்பு' என்ற பொருள் பற்றிய கதாப் பிரசங்கம் செய்வார். பின்னர் சுவாமி அன்னவாகனத்தில் வீதி வலம் வருவார். இரவு 8-30—9 30 வரை செல்வி குணபூஜனி நாகலிங்கம் இன்னிசைக் கச்சேரியும் நடைபெறும்.

... பூமிக்கு கொண்டுவரப்படும். அப்பல்லோ 13 இறங்கும் இடத்திலிருந்து 4500 ...

... பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் கூறியுள்ளார்.

## 'திட்டமிட்ட குடியேற்றத்தால் அரசாங்கத்துக்கு நஷ்டமே'

இமையாணன், ஞாயிறு

''திட்டமிட்ட குடியேற்றத்திட்டத்தை தமிழரசுக் கட்சி நிறுத்தி வைத்தது பெரிய சாதனையாகும். குடியேற்றத்திட்டத்தை நிறுத்தியிருக்காவிட்டால் எத்தனையோ தமிழ்ப் பிரதேசங்கள் இன்று முற்றிலும் சிங்கள மக்களின் பிரதேசமாக மாறியிருக்கும். கல்லோயா குடியேற்றத்திட்டத்தினால் அப்பகுதி சிங்களப் பகுதியாக மாறி ஒரு சிங்களப்பிரதிநிதியே ஆட்சிமன்றத்திற்கு வருகின்றார். அத்துடன் அக்குடியேற்றத்தினால் அரசாங்கத்திற்கும் நட்டமே தவிர லாபம் ஏற்படவில்லை. அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட ஒருகுழுவின் அறிக்கையேகல்லோயாக்குடியேற்றத் திட்டத்தினால் நட்டம் ஏற்பட்டதே தவிர லாபம் ஏற்படவில்லைஎன்று கூறுகிறது''

இவ்வாறு உடுவில் எம்.பி திரு தர்மலிங்கம் வல்வெட்டியில்நடைபெற்ற தமிழரசு வாலிப முன்னணிக் கிளை திறப்புவிழாவின்போதுகூறினர்.

திரு எஸ். ஜே வி. செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில் 1948ம் ஆண்டுக்கு முன்னரே காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலைக்கு அத்திபாரக்கல் நாட்டப்பட்டு இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்பட்டு கேள்விப்பத்திரமும் கோரப்பட்டதென்றும் அந்நேரத்தில் கைத்தொழில் மந்திரியாக திரு ஆர். ஜி சேனநாயக்காவோ அல்லது வேறு எவரோ வந்திருந்தாலும் அவை நமக்குக் கிடைத்திருக்குமென்றும் சொன்னர்.

ஜனாப். மஷூர் மௌலானா பேசும் போது கூறியதாவது தமிழரசுக்கட்சி ஒரு விடுதலை இயக்கமென்றும்எதிர்காலம் வாலிப சமுதாயத்திலேயே தங்கியுள்ளதுஎன்றும்சொன்னர்.

பருத்தித்துறை எம். பி. திரு க. துரைரத்தினம் பேசுகையில் கொள்கை, லட்சிய அடிப்படையில் தமிழ்பேசும் இனம் ஏகமனதாக ஒரே கட்சிப் பிரதிநிதிகளை ஆட்சிமன்றத்திற்கு அனுப்பவேண்டும் என்றார் மற்றும் பலரும் உரையாற்றினர்.

.........

## த. கா. கிளை

உடுப்பிட்டி, ஞாயிறு

தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் கம்பர்மலைக் கிளைக் கூட்டம் உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் தலைமையில நடைபெற்றது தலைவர்களாகத் திரு. தங்கராசா, திரு. வைத்திலிங்கம் தம்பு ஆகியோரும், இணைக் காரியதரிசிகளாகத் திருவாளர்கள் அ. சந்திரசேகரமும், தா. சதாசிவமும் தெரிவு செய்யப்பட்டனர்

நிர்வாகசபையொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

—— ——

## "உண்மையில்லை"

புதுடில்லி, மார்ச் 14

ஜம்மு—காஷ்மீரில் ஆட்சி செய்யத் தமக்குப் போதிய பெரும்பான்மையிருப்பதாக முதல்வர் திரு. சாதிக் தெரிவித்தார்.

தமக்கு ஆதரவு இல்லை என்று காங்கிரஸ்காரர் சிலர் கிளப்பியுள்ள வதந்திகளில் உண்மையில்லையென்று அவர் கூறினர்.

——

# தேயிலைத் தோட்டங்கள் தேசிய மயமாக்கப்படுமாம்

## எதிர்க்கட்சி தேர்தல் விஞ்ஞாபனம் கூறுகிறது

கொழும்பு, ஞாயிறு

தேயிலைத் தோட்டங்களைத் தேசிய மயமாக்கும் திட்டம் எதிர்க் கட்சியினரின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் பிரகடனப்படுத்தப்படவிருப்பதாக தெரிகிறது.

தேர்தல் விஞ்ஞாபனம் பற்றி ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நால்வர் கொண்ட கொடு இதுபற்றி ஆராய்ந்து வருகிறது. இத்திட்டம் பற்றி கூட்டுக் கட்சிப் பிரதிநிதிகள் விரைவில் கூடி ஆராய்வர்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, ஆகியன ஒன்று சேர்ந்த போது, 1968-ம் ஆண்டு பிரகடனப் படுத்தப்பட்ட பொதுக்கொள்கைத்திட்டங்களுடன்தேயிலைத்தோட்டங்கள் தேசிய மயமாக்குதல் என்ற திட்டம் மட்டுமே இப்போது சேர்க்கப்பட்டுள்ளதாம்.

தேர்தலுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்தால் தேயிலைத் தோட்டங்கள், வர்த்தக சம்பந்தமான ஏற்றுமதி போன்றவை தேசிய மயமாக்கப்படும் என எதிர்க்கட்சி உறுதி கூறவிருக்கிறது

3 கட்சிகளாலும் 1968-ம் ஆண்டு வெளியிடப்பட்ட பொதுக்கொள்கைத் திட்டத்தில் அரிசிவெட்டை இல்லாமல் செய்தல் வேலை இல்லாப் பிரச்னைக்கு தீர்வு காணல் அந்நியநாட்டுவங்கிகளில் இலங்கையர் கணக்கு வைப்பதை இல்லாமல் செய்தல் போன்றவை இடம் பெற்றிருந்தன.

தேர்தல் விஞ்ஞாபனக் குழுவில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ரி, பி. சுபசிங்கா, எஸ், ஆலிங், லங்கா சமசமாஜக்கட்சி, லெஸ்லி குணவர்த்தன கம்யூனிஸ் கட்சி (மாஸ்கோ பீட்டர் கெனமன் ஆகிய நால்வரும் புதிய தேர்தல் விஞ்ஞாபனம் பற்றி ஆராய்ந்து வருகின்றனர். (சி, பி, ஏ)

செக்கோஸ்லவாக்கியாவில்

# சிறுபான்மை இனமக்கள் சமத்துவமாக வாழ்கிறார்கள்

## அந்தநாட்டு தூதுவர் கூறிய தகவல்

யாழ்ப்பாணம், ஞாயிறு

''செக்கோஸ்லாவாக்கியாவில் பல இன மக்கள் வாழ்கிறார்கள். எல்லா இன மக்களும் சமத்துவமாக வாழ்கிறார்கள்.''

இந்தத்தகவலைசெக்கோஸ்லவாக்கியதூதுவர் யாழ்ப்பாணத்தில் வெளியிட்டார்.

யாழ்ப்பாணண மலாயாகபே மேல்மாடியில் சனிக்கிழமை நடைபெற்ற இலங்கை- செக்கோஸ்லவாக்கிய நட்புறவுச் சங்க யாழ். பிரதேசக் கூட்டத்தில் பேசுகையில் செக். தூதர் திரு. பவலோவ் மேற்கண்டகருத்தை வெளியிட்டார். திரு. பேராயிரவர் கூட்டத்திற்கு தலைமை வகித்தார்.

திரு. பவறோவ் மேலும் கூறியதாவது:

''இலங்கையில்சிங்களவர்- தமிழர் என இரு இன மக்கள் வாழ்வதுபோல ஒரே தன்மையில் எமது நாட்டில் செக். ஸ்லோவாக் என இரு இனத்தவர் வாழ்கின்றனர். தேசிய சிறுபான்மை இனமாக ஜெர்மனிய, ஹங்கேரிய உக்ரேனிய மக்கள் எமது தேசத்தில் இருக்கின்றனர். எந்தவகையிலும் பாகுபாடுகளின்றி தொகைகள் கணக்கின்றி சகல இனத்தவரும் சமத்துவநிலையில் நிர்வகிக்கப்படுகின்றனர் தேசிய சிறுபான்மை இனத்தவர் தமது தாய்மொழிகளிலேயே பல்கலைக்கழகக்கல்விப்போதனையைப் பெறுகின்றனர். ஆராய்ச்சி பீடங்கள்கூட சிறுபான்மை இனத்தவர்களின் மொழி ஆராய்ச்சிக்காக எமது தேசத்தில் நிறுவப்பட்டுள்ளன''

தற்போது நமது நாட்டில் அரசியல் ரீதியில் தேசிய இனங்களிடையே நிரந்தர தீர்வுகாணப்பட கூட்டாட்சி அரசு அமைக்கப்பட்டுள்ளது. வேலையில்லாப் பிரச்சனை எமது நாட்டில் கிடையாது தொழில்வசதி அதிகம் நிறைந்துள்ளது. ஆள் பற்ருக்குறை நிலவுகிறது. கலைஞர்கள் உரிமை பெற்றுசமூக விடுதலைக்கு பெரும் சேவையாற்றியுள்ளனர். ஒருசில கலைஞர்கள் தீவிரபோக்கினையும் அனுஷ்டிக்கின்றனர். கலை, கலாச்சாரவிடுதலைக்கு தனியான வசதிகள் வழங்கப்படாது தேசத்தின்பூரண மறுமலர்ச்சிக்கு கலைஞர்கள் உபயோப்கபடுத்தப் படுகின்றனர். தனியார்துறை விவசாயம் கைத்தொழில்கள் மிகக் குறைவு கூட்டுறவு அடிப்படையிலேயே எமது நாட்டில் விவசாய அபிவிருத்தி நிலவுகின்றது

திரு. எஸ். நடராசா நன்றியுரை கூறினர். (மல். நி)


# "ஈழநாடு"

## பாலைதீவு நிவாரணநிதி

இந்நிதிக்குப் பணம் அனுப்ப விரும்புபவர்கள் 'பாலைதீவு விபத்து நிவாரணநிதி', 'ஈழநாடு' யாழ்ப்பாணம்என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க அன்புடன் வேண்டுகிறோம்.

### உதவி வழங்கியோர்:

| | |
|---|---|
| நேற்றுவரை சேர்ந்த தொகை | ரூபா 4,482-75 |
| பருத்தித்துறை வைத்திய சுகாதார அலுவலக ஊழியரும் அரசினர் ஆஸ்பத்திரி ஊழியரும் | ரூ. 77-16 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

12-ம் திகதி இரவு 9-45க் காட்சியில் கார் பாக்கில் தவறிவிடப்பட்டிருந்த ஒரு பிரயாணப் பை கண்டெடுக்கப்பட்டு மனோகரா தியேட்டர் காரியாலயத்தில் இருக்கிறது. உரிமையாளர் காரியாலயத்தில் தகுந்த காரணங்காட்டிப் பெற்றுக்கொள்ளவும். ந. பத்மநாதன் மனேஜர், யாழ்ப்பாணம். 1922

### விற்பனைக்கு

எலெக்றிக் வெல்டிங் 150 AMPS TRIAL மார்க் எலெக்றிக் றில் ஒன்றும், கான்ட்றில் ஒன்றும், A 40 செசியும் விற்பனைக்கு உண்டு. 72, சிவன்கோவில் மேலே வீதி, யாழ்ப்பாணம். 1664

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### திங்கள் 16—3—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற் சிந்தனை, 6-30 கிறிஸ்தவ நற் சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 8-00 செய்திச் சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதம், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 தொழிலாளர் கேட்டவை, 1-00 திரைகானம், 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச் சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 வளரும் பயிர்.

இரவு 6-15 இசைப்பயிற்சி 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம் 7-03 கிராம சஞ்சிகை, 7-15 பாட்டு, 7-45 செய்திச்சுருள், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 நாதகரம், 10-30 செய்திச்சுருக்கம்.

## தோட்டம் விற்பனைக்கு

### ஆனைப்பிறவுப் பகுதி

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆனைப்பிறவுப் பகுதியில் துப்புரவு செய்யப்பெற்று கம்பிவேலியடைத்த பயிரிடப் பெரிய வளமான 42 ஏக்கர் நிலம்.

தென்னை மற்றும் காய்கறித் தோட்டச் செய்கைக்கும், குடியிருக்கவும் ஏற்றது. குடியிருக்கும் பகுதியையும் 'மல்லிகை' ஆலயத்தையும் அடுத்துள்ளது 1/4 மைல் தூரத்திற்கு குளத்தை முகப்பாயும் சுற்றிலும் ரம்மியமான காட்சியும் அமைந்த சுகாதாரத்திற்கு ஏற்ற இடம். பிரதான வீதியிலிருந்து 1/2 மைல் தூரத்திற்குத் தார் போட்ட வீதியுண்டு.

சொந்தக்காரர் வெளிநாடு போவதால் விற்பனைக்குண்டு. திரு. செ. குமிராஜா, 'சோர்வியர்', 8, சோமசுந்தரம் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திற்குத் தொடர்பு கொள்ளவும். 1990

## இம்மாதம் இலங்கையில் உஷ்ணநிலை

கோட்டை, ஞாயிறு

இம்மாதம் சூரிய உஷ்ணநிலை சுமார் 92.93 பாகை (பரனைட்) யாக இருக்குமென காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

கடந்த சில தினங்களில் ஏறித்த வெயிலின் உஷ்ணம் குருநாகலில்தான் மிகவும் கூடுதலாக உள்ளது எனக் கணிக்கப்பட்டது. இலங்கையில் உஷ்ணநிலை பின் வருமாறு:

குருநாகல் 97 பாகை அனுராதபுரம் 91 பாகை கொழும்பு-காலி, யாழ்ப்பாணம், காங்கேசன்துறை, மன்னார், இரத்மலானை, வவுனியா ஆகிய இடங்களில் 90 பாகை.

## அறிவித்தல்

பெரிய கடையில் உள்ள செங்காசத்திரத்தின் சுவர்களில் விளம்பரங்கள் ஒட்டக்கூடாதென இத்தால் சகலருக்கும் அறியத்தருகிறேன். இதை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். து. வைத்திலிங்கம், செங்காசத்திரத்தின் தர்மகர்த்தா, வேலணை மேற்கு, வேலணை 1994

## நெல்லியடிப் பட்டினம் கேள்வி விளம்பரம்

1970-ம் ஆண்டு, பங்குனி மாதம் 31-ந் திகதி (31-3-1970) முற்பகல் 10-30 மணிவரைக்கும் மேற்படி பட்டின விசேஷ ஆணையாளரால் கீழ்க்காணும் வேலைக்குப் பதிவுசெய்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 'சீல்' வைத்த கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

கேள்விகள் ஒவ்வொன்றிற்கும், கேள்விப்பிணைப்பணம் ரூபா 50/-ம், பத்திரப்பணம் ரூபா 10/-ம் செலுத்தியபின் பேரில் 26-3-1970 முற்பகல் 11-00 மணிவரை, விசேஷ ஆணையாளரால் வழங்கப்படும் உத்தியோக பூர்வமான பத்திரத்தில் கேள்விகள் அனுப்பப்படல் வேண்டும்.

கேள்விகளை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ விசேஷ ஆணையாளருக்கு எச்சமயத்திலும் பூரண உரிமையுண்டு.

ஏனைய விபரங்கள் யாவும் நெல்லியடிப்பட்டின விசேஷ ஆணையாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

அ. அ. ஜோசெப்
விசேஷ ஆணையாளர்.

வேலையின் விபரம்

1 பட்டினசபைக்கூடத்தோர் கட்டிடம் விசாலித்து அமைத்தலும் (பகுதி 1), துவிச்சக்கரவண்டி நிறுத்தும் மடுவம் நிறுவுதலும்.

விசேஷ ஆணையாளர் அலுவலகம்,
நெல்லியடிப் பட்டினம்,
கரவெட்டி, 13-3-1970. 1992

## முஸ்லிம் வித்தியாலயம் முதலிடம்

குருநாகல், ஞாயிறு

குருநாகல் கல்வி வட்டார (தமிழ்) கரபந்தாட்டப் போட்டியில் தலகஸ்பிட்டிய முஸ்லிம் மகாவித்தியாலயம் முதலிடத்துக்கான வெற்றிக்கிண்ணத்தைப்

## இரு பிரிவுகளில் முதலிடம்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

உடுப்பிட்டி வட்டாரப் பாடசாலைகளின் உடற்பயிற்சிப்போட்டியில், வல்வெட்டி சைவ வித்தியாசாலை இரு பிரிவுகளில் முதலாம் பரிசைத் தட்டிக்கொண்டது. உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் நடந்த இப்போட்டியில், வல்வெட்டி சைவவித்தியாசாலை 19 வயதுக்குட்பட்ட பெண்களின் போட்டியிலும், 16 வயதுக்குட்பட்ட ஆண்களின் போட்டியிலும் முதலாம் இடத்தைப்பெற்றது 13 வயதுக்குட்பட்ட பெண்களின் போட்டியில் 2-ம் இடத்தைப்பெற்றது.

உடுப்பிட்டி, வெள்ளி

இளம்பிள்ளை வாதத்தடுப்பியக்கத்தில் பணிபுரிந்த தொண்டர்களுக்குச் சான்றுப் பத்திரங்களைப் பரிசளிக்கும் விழா 14-ம் திகதி மாலை நெல்லியடி (அரசடி) மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. உபசபா நாயகர் திரு. எம். சிவசிதம்பரம் சான்றுப் பத்திரங்களை வழங்குவார்.

## அறிவித்தல்

### வட இலங்கைச் சங்கீதசபை-யாழ்ப்பாணம்

### 1970-ம் ஆண்டு

## சங்கீதப் பரீட்சைகள்

மேற்படி சபையால் நடாத்தப்படும் சங்கீதப் பரீட்சைகள் (சாஸ்திரப்பிரிவுப் பரீட்சைகள்) கொழும்பு, திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், பருத்தித்துறை, தெல்லிப்பழை, கோப்பாய், சாவகச்சேரி, ஆகிய இடங்களில், 24-7-1970 வெள்ளிக்கிழமை நடைபெறும். விண்ணப்பங்கள் 31-5-1970வரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப்பத்திரங்களுக்கும் மற்றும் ஏனைய விபரங்களுக்கும், தலைவர், வட இலங்கைச் சங்கீதசபை, வித்தியாபகுதி, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

சி. தனிகாசலம்,
வட இலங்கைச் சங்கீதசபைத் தலைவரும்,
வடபிரதேச வித்தியாதிபதியும்.

வடஇலங்கைச் சங்கீதசபை அலுவலகம்,
வித்தியாபகுதி, கஸ்தூரியார்வீதி,
யாழ்ப்பாணம், 12-3-1970. 1993

## கட்டுப்பெத்தை தமிழ்மன்றப் போட்டி முடிவு

மொறட்டுவா, ஞாயிறு

கட்டுப்பெத்தை இலங்கை உயர் தொழில் நுட்பவியல் கலாசாலைத் தமிழ்மன்றத்தின் விவாதத் திறமைப் போட்டியொன்று கலாசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இதில் வெற்றி பெற்றோர் விபரங்கள் வருமாறு:

முதலிடம்: திரு. கு. புனிதவேல், இரண்டாவது இடம்: திரு. மாவை. தி. நித்தியானந்தன், மூன்றாவது இடம்: திரு. வே. சிவனடியார்.

விவாதக் குழுவிற்காக மேலும், திருவாளர்கள் சி. வசந்தகுமார், இ. முத்து ரத்தினனந்தன், இ. சிவபாலன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

வல்வெட்டித்துறை, ஞாயிறு

அல்வாய் தெற்குச் சேர்ந்த மு. இரத்தினம், மு. வேலாயுதம், மு. மயில்வாகனம் ஆகிய மூவரும் கடந்த மாதம் அதே இடத்தைச் சேர்ந்த சு. கந்தையா, ச. கோபாலசிங்கம் ஆகியோருக்கு அடித்துப் படுகாயம் விளைவித்ததாக பருத்தித்துறைப் பொலிசாரால் குற்றம்சாட்டித்தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

## மாதர் முன்னணி

சாவகச்சேரி, ஞாயிறு

எழுதுமட்டுவாள் மாதர் முன்னணி நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவி திருமதி எஸ். நிருஷ்ணன், உபதலைவி: என். சீதாதேவி, காரியதரிசி: என். சின்னம்மா, உபகாரியதரிசி: எஸ். சரஸ்வதி, பொருளாளர்: வி. இந்திராதேவி, பரிசோதகர்: வி. பரமேஸ்வரி, என். கோகிலமணி, கே. சிவபாக்கியம், கே. தங்கம்மா, எஸ். இராசமணி, எஸ். கனகம்மா, எஸ். இராசம்மா ஆகியோர் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

## அதிருப்தி

யாழ்ப்பாணம், திங்கள்

தமிழ்ப் பகுதியில் உள்ள தொழில் கந்தோர்கள் மூலம் பரந்தன் இரசாயனதொழில் சாலைக்கு உத்தியோகஸ்தர் தெரிவு செய்யப்படாது, கொழும்பு கந்தோர்வாயிலாக அண்மையில் ஒருசில எழுதுவினைஞர்களை இரசாயன கூட்டுத்தாபனம் தெரிவு செய்யப்பட்டதாக அறிந்ததையொட்டி தேர்தல்காலங்களில் விசேடமாக சிங்களப்பகுதி தொழில்கந்தோர் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களை தமிழ்ப்பகுதி தொழிற்சாலைக்கு வேலைக்கு ஏற்பதுபற்றி மேற்படி ஸ்தாபன தமிழ் தொழிலாளர்கள் அதிருப்தியடைந்துள்ளார்கள்.

வந்துவிட்டன! வந்துவிட்டன!!

BOSCH SERVICE

பொஷ் கோண்கள்

தொகையாக வந்துள்ளன

மொத்தவிலை: ரூ. 162-50 (சோடி)

சமுத்திரா ட்றேட்ஸ் லிமி.

23/2, ஸ்ரான்லிறோட், (போன்: 7236) யாழ்ப்பாணம்.

ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]

ஸ்ரீசங்கர் [இருவேடங்கள்] ஹெலன் குமாரி, மஞ்சுளா நடித்த

மஞ்சள் குங்குமம்

ராஜா (யாழ்ப்பாணம்)

சிவாஜி - ஜி. வரலக்ஷ்மி நம்பியார் - தங்கவேலு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஞ்சள் குங்குமம்

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்

சிவாஜி - ஜி. வரலக்ஷ்மி
நம்பியார் - தங்கவேலு
நடித்த

# ஹரிச்சந்திரா

விண்ஸர் திரையில்
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி கணேசன்-ஏ.வி.எம்.ராஜன்
விஜயநிர்மலா-நாகேஷ்-எம்.ஆர்.ஆர்.வாசு
நடித்த


# பந்தயம்

பாடல்கள்:
கண்ணதாசன்

இசை:
கே வி மகாதேவன்


வெற்றிகரமான 2 வது மாதம்
கெப்பிட்டல்
(கொழும்பு)
வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி பி. ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி

1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய
ஜனாதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்ற
வெற்றிச்சித்திரம்

சிவாஜிகணேசன் பத்மினி

பாலையா
நாகேஷ்
நம்பியார்
ஏ.வி.எம். ராஜன்
மனோரமா
மற்றும்பலர் நடித்த



சிவாஜிகணேசன் [அளிக்கும்]

ஸ்ரீ விஜயலக்ஷ்மி பிக்சர்ஸ்

# தில்லானா மோகனாம்பாள்

திரைக்கதை, வசனம், டைரக்ஷன்
A. P. நாகராஜன்

குருநாகல், ஞாயிறு
குருநாகல் கல்வி வட்டார (தமிழ்) கரபந்தாட்டப் போட்டியில் தலகஸ்பிட்டிய முஸ்லிம் மகாவித்தியாலயம் முதலிடத்துக்கான வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டது.

இம்மகாவித்தியாலயம் கடந்த மூன்று வருடங்களாகத் தொடர்ந்து கரபந்தாட்டத்துக்கான வெற்றிக்கிண்ணத்தைப் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30 9-30
பிறிப்போயா, போயா 2-30
சிவாஜி-சரோஜாதேவி
நடித்த
குலமகள் ராதை

வல்வெட்டித்துறை
றஞ்சனா தியேட்டர்
தினசரி: 6-30, 9-30
எம். ஜி. ஆர். - ஜமுனா
நடித்த
தாய்மகளுக்கு
கட்டிய தாலி

இன்று மட்டும்
வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 10-00
பிறிபோயா, போயா 2-30 மணி
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நடித்த
தாய்சொல்லைத்
தட்டாதே

Now showing
REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p m
Poya, Pre-poya 4 Shows
SEVEN SLAVES
AGAINST ROME

வெற்றிகரமான 3 வதுவாரம்
MANOHARA
JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
Poya, Prepoya 4 shows
HELGA
The most revealing Sex education Film ever released!
(Strictly for adults only)
கருவுற்பத்தி முதல் பிரசவம் வரையில் இதுவரை திரைக்கு அனுமதிக்கப்படாத பல சம்புவங்களை புதிய சாதனைக் கருவிமூலம் வெளிப்படுத்திக் காட்டும் பிரசவ சித்திரம்.
ஹெல்கா
(கட்டாயமாக வயது வந்தவர்களுக்கு மட்டும்)
பாஸ்கள்-சலுகைகள் ரத்து



# பாரினில் நிகரற்றவை!

சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ்
யானை மார்க்
குளிர்பானங்கள்



GRANT 77 155 70

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெக்கா யாத்திரிகர் 105 பேர் கடலுக்குப்பலி: திரும்பிவருகையில்படகுகவிழ்ந்தது

## 75 பிரயாணிகளை பிரி. கப்பல் காப்பாற்றியது

அபுதாபி, மார்ச் 14

மக்காவுக்குச் சென்று திரும்பிக்கொண்டிருந்த படகொன்று கவிழ்ந்ததில் நூறுபேருக்குமேல் மாண்டு போனுர்கள்.

மக்காவுக்குச் சென்று தொழுகைகளில் கலந்து கொண்டுவிட்டு சுமார் 180 யாத்திரிகர்கள் இந்தப்படகில் திரும்பிக் கொண்டிருந்தார்கள். படகு பேர்ஸியக் குடாவில் அபுதாபிக்கு அருகில் கவிழ்ந்து போயிற்று. அதிலிருந்த பிரயாணிகளில் 105 பேர் கடலில் பலியாகிவிட்டதாக அஞ்சப்படுகின்றது.

படகிலிருந்த 75 யாத்திரிகர்களை பிரிட்டிஷ் கப்பலொன்றுகாப்பாற்றி கரை சேர்த்தது. இவ்வாறு மீட்கப்பட்ட ஒருவரே இந்த விபத்து பற்றியும் படகில் பிரயாணம் செய்தவர்களின் எண்ணிக்கை பற்றியும் தகவல் கொடுத்திருக்கிருர். படகில் இந்தியர்களும் பலர் பிரயாணம் செய்ததாகத்தெரிகின்றது.

### நில அதிர்ச்சி 5 பேர் பலி

ஈரானில் நேற்று ஏற்பட்ட நில அதிர்ச்சியொன்றில் 5 பேர் பலியாகியிருப்பதாக அஞ்சப்படுகின்றது. ஏராளமான பொருள் நஷ்டம் ஏற்பட்டிருக்கக்கூடும் என்றும் மேலும் பலர்காயமடைந்திருக்க வேண்டுமென்றும் கருதப்படுகின்றது.

### சுரங்க விபத்தில் 37 பேர் பலி

பெல்கிரேட், மார்ச் 14

யுகோஸ்லாவியாவில் நேற்று நிலக்கரிச் சுரங்கமொன்றில் ஏற்பட்ட விபத்தில் 51 சுரங்கத் தொழிலாளர் கொல்லப்பட்டிருக்கிருர்கள். சுரங்கத்தின் இடிபாடுகளில் இன்னும் ஐந்தாறு பேர் புதைந்து கிடப்பதாகவும் அஞ்சப்படுகின்றது. மீட்பு வேலைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

### விமான வித்தில் 36 பேர் பலியாகினர்

பிரேஸில் நாட்டில் ஏற்பட்ட விமான விபத்தொன்றில் 36 பேர் பலியாகியிருக்கிருர்கள். பறந்துகொண்டிருந்த விமானம் விபத்துக்குள்ளாகி அமேஸன் ஆற்றில் வீழ்ந்து மூழ்கியது.

### எகிப்திய விமானத்தில் வெடி விபத்து

கெய்ரோ, மார். 15

அலெக்ஸான்ரியாவுக்கு கெய்ரோவிலிருந்து புறப்பட்ட ஐக்கிய அரபுக் குடியரசு விமானத்தில் குண்டு வெடித்தது. இதலிருந்த ஒன்பதுபேரில் ஒருவர் காயமடைந்தார். விமானம் புறப்பட்ட சில நிமிடங்களுக்குள் விபத்து ஏற்பட்டது. விமானம் உடனே கெய்ரோவுக்குத் திருப்பி ஆகாயத்திலேயே சுமார் ஒன்றரை மணி நேரம் பறந்து கொண்டிருந்தது. விமானத்தில் குண்டு வெடித்ததினுல் நிறைந்துவிட்ட வாயுக்களை வெளியேற்றுவதற்காகஇவ்வாறு வெகு நேரம் ஆகாயத்திலேயே பறந்து கொண்டிருந்தது. பின்னர் விமானம் கெய்ரோ விமான நிலையத்தில் சக்கரங்கள் விரியாத நிலையில் ஆபத்து இன்றிஇறங்கியது.

### பத்திரிகை ஆசிரியர் கொலை

பொலிவியாவில் பத்திரிகை ஆசிரியர் ஒருவரும் அவரது மனைவியும்நேற்று கொலை செய்யப்பட்டனர் நேரம் குறிதது வெடிக்கும் குண்டு ஒன்று பார்சலாக சுற்றி அவர்களுக்கு வழங்கப்பட்டதாகவும், என்னவென்று பார்ப்பதற்காக பத்திரிகை ஆசிரியரும் அவர் மனைவியும் அதனை அவிழ்த்தபோது குண்டு வெடித்தது. இருவரும் பலியானதாகத் தெரிகின்றது.

### இன்று ராஜினுமா செய்வார்

கல்கத்தா, மார்ச். 15

மேற்குவங்காள முதலமைச்சர் திரு. அஜோய்குமார் முகர்ஜி நாளையதினம் தமது ராஜிநாமாவை கவர்னரிடம் தாக்கல்செய்யப் போவதாக அறிவித்தார். ஏற்கனவே மூன்று அமைச்சர்கள் தாக்கல்செய்துள்ள ராஜிநாமாக்களை ஏற்றுக் கொள்ளும்படி கவர்னரிடம் இன்று சிபாரிசு செய்யப்போவதாகவும் அவர் கூறினுர்.

### ஒஜுக்குமீது ராஜதுரோக குற்றச்சாட்டு

லேகோஸ், மார்ச் 15

பியாவ்ரா பிரிந்து போவதற்கு காரணமாய் இருந்த கேணல் ஒஜுக்கு எப்பொழுதாவது மீண்டும் திரும்பிவந்தால் அவர்மீது பெரும் ராஜதுரோகக் குற்றத்துக்காக விசாரிக்கப்படுவார் என்று நைஜீரிய அதிபர் கோலான் அறிவித்திருக்கிருர். ஏனைய பியாப்ரா தலைவர்கள்மீது முறைப்படி விசாரணை நடத்தப்படும்என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### மூதூர்ச் செய்திகள்

#### இணக்கசபை

மூதூர். ஞாயிறு

கடந்தமாத அரசாங்க வர்த்தமானி வெளியீட்டின்படி மூதூர் பட்டின சபை எல்லைக்குள் ஓர் இணக்கசபை நிறுவப்பட உள்ளது. இச்சபை உறுப்பினர்களின் தகுதிபற்றி காரியாதிகாரியின் சிபார்சு கிடைத்ததும் சபை உறுப்பினர்கள் நியமனம் பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

காவேரி அணை

### மைசூர் அரசின் கெடுபிடி போக்கு

பெங்களூர், மார்ச் 15

''காவேரியில் புதிய அணைகளைக் கட்டியே தீருவோம். எந்தக் காரணததிற்காகவும் வேலையை நிறுத்தமாட்டோம்'' என்று மைசூர் முதன்மந்திரி வீரேந்திரபட்டீல் அறிவித்திருக்கிருர்.

தமிழக அரசின் எதிர்ப்பையும், டில்லி அரசின் உத்தரவையும் மீறி காவேரி ஆற்றில் மைசூர் அரசாங்கம் அணைகள் கட்டி வருவது தெரிந்ததே.

ஏமாவதி, கபினி ஆகிய 2 அணைகள் கட்டப்படுகின்றன. இதனுல் தமிழ்நாட்டுக்குக் கிடைக்கவேண்டிய காவேரி ஆற்றுத் தண்ணீருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது

டில்லியின் உத்தரவை மீறியதால், இந்த அணைகள் கட்டுவதற்குப் பண உதவி செய்யமாட்டோம் என்று டில்லி அரசு நீர்ப்பாசன மந்திரி கே. எல். ராவ் அறிவித்திருந்தார்.


இது குறித்து மைசூர் சட்டசபையில் விவாதம் நடந்தது. விவாதத்திற்குப் பதிலளித்து முதன்மந்திரி வீரேந்திரபட்டீல் கூறியதாவது: ''அணைகள் கட்டும் வேலையை எந்தக் காரணத்திற்காகவும் நிறுத்தமாட்டோம். தொடர்ந்து வேலை நடக்கும். இன்னும் 2 ஆண்டுகளில் அணைகள் கட்டி முடிக்கப்பட்டு அங்கு தண்ணீர் தேக்கிவைக்கப்படும். பண உதவி தரமாட்டோம் என்கிருர் கே. எல். ராவ் இப்போது மட்டும் என்னவாம்? டில்லியின் உதவியில்லாமல் மைசூர் மாநிலத்தின் சொந்தப் பணத்தைக் கொண்டுதான் அணைகள் கட்டுகிருேம். ஆகவே டில்லியின் பண உதவி பற்றிய கேள்வியே எழவில்லை.''

### 'சிறுவர் பாடசாலைகளுக்கு அரசாங்கம் உதவும்?''

மீசாலை, ஞாயிறு

இன்று நாட்டிலே ஊர்கள் தோறும் இயங்கிவரும் சிறுவர்பாடசாலைகளுக்கு உள்ளூராட்சி மன்றங்கள் மூலம் நிதியுதவிவழங்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதென்றும், அரசாங்கம் அவ்வாறு உதவிகளை வழங்கினுலும் வழங்காவிட்டாலும் யாழ் இளைஞர்கழகத்தால் நிறுவப்பட்டிருக்கும் இச்சிறுவர்பாடசாலைக்குத் தம்மாலியன்ற உதவிகளைச் செய்யத்தயாராக விடுப்பதாகவும் சாவகச்சேரி பட்டின சபைத் தலைவர் திரு. சு. கனகரத்தினம் நேற்று முன்தினம் மீசாலை கிராமமுன் சாலைகளை இவ்வாண்டுக்குள் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் நிறுவவிடுப்பதாகவும் இக்கிராமத்தில் கிடைப்பதுபோன்ற ஆதரவுஏனைய கிராமங்களில் கிடைக்குமாயின் அங்கும் பாலர்பாடசாலைகளை நிறுவி படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கத் தயாராக விடுப்பதாகவும் தெரிவித்தார்.

உசன் மகாவித்தியாலய அதிபர், திரு. சிவப்பிரகாசம் உரையாற்றுகையில் அவுஸ்திரேலியாவில் சிறுவர் கல்வி வகுப்பறையோடு மட்டும் நிற்காமல் சுற்றுலா கண்காட்சிபோன்ற உற்சாகமூட்டக்கூடிய வகைகளில்



### மஞ்சள் குங்குமம்

#### ஈழத்து திரைச்சித்திரம்

ஈழத்து இலக்கியம், ஈழத்து நாட்டியம், ஈழத்து நாடகம் என்று நாம் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்ளும் வரிசையில் ஈழத்துச் சினிமாப் (தமிழ்) படம் என்றும் சேர்த்துக்கொள்ளக்கூடிய காலம் நெருங்கிக்கொண்டிருக்கிறது. அப்படியான ஒரு நிலைமைக்கு இப்பொழுது திரையிடப்பட்டிருக்கும் 'மஞ்சள் குங்குமம்' தமிழ்ப் படம் வழி வகுக்குமென்று எதிர்பார்க்கலாம்.

இங்கு கதைகளுக்கோ, நடிகர்களுக்கோ, முயற்சிகளுக்கோ குறைவில்லை. ரசிகர்களும் ஆதரவளிக்கத் தயாராகவே இருக்கின்ருர்கள்' என்ருலும் நாம் இன்னும் சில துறைகளிலே வளரும் நிலையிலேயே இருக்கின்ருேம்......

''இந்தியாவில் பெரும் முதலீடுகளோடு, அனுபவமிக்க நடிகர்களையும், தொழில் வல்லுனர்களையும் கொண்டு படம் எடுக்கிருர்கள். ஆனுல் இங்கு நமக்கு அந்தவசதிகள் கிடையாது'' இவ்வாறு கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் நேற்று முன்தினம் 'மஞ்சள் குங்குமம்' படத்தை ராணி சினிமாவில் ஆரம்பித்து வைக்கையில் கூறினுர்.

''படத்தில் குறைகள் காணப்படுமானுல் அவைகளைப் பெரிதுபடுத்தாமல் நம்நாட்டுப் படம் என்ற வகையில் ஆதரிக்க வேண்டும்'' என்றுஅவர் கேட்டுக் ஈழத்துத் தயாரிப்பு என்ற வகையில், படத்துக்கு நம் ரசிகர்கள் பெரும் ஆதரவளிப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம். ஏனென்ருல் இந்தப் படத்துக்கு அளிக்கப்படும் ஆதரவில்தான் புதிய ஈழத்து முயற்சிகள் தோன்றுவதற்கும் இதரபடங்களோடு போட்டியிடுவதற்கும் வழிபிறக்கும்.

கலைக்கு மதிப்பளிக்கும் கதாநாயகன், அவன் உருவத்தில் தன் தமையனின் சாயலைக்கண்டு உருகும் கதாநாயகி, இந்தப் பிணைப்பில் சந்தேகம் கொள்ளும் கணவன் இவ்வாறு சிக்கலைவைத்துக் கொண்டு படத்தை உருவாக்கியிருக்கிருர்கள். தென்னிந்திய தமிழ்ப்படங்களுக்கு ஈடாக விளங்கவேண்டும் என்பதனுல்பெரும் பிரயாசையுடன் காட்சிகளை அமைத்திருக்கிருர்கள். நடனம், பாடல், சண்டை, ஏன் காதல்காட்சிகள் யாவும் இந்தியப்படங்களுக்கு இணையாக இருக்க வேண்டும் என்ற ஆர்வத்திலும், அந்த படங்களைப் பார்த்துப்பழகிய நம்ரசிகர்களைத் திருப்திப்படுத்த பவேண்டும் என்பதாலும் சிறப்பாகப் புகுத்தியிருக்கிருர்கள்.

ஆங்காங்கே நமது கலைஞர்களின்சிறப்புகள் பளிச்சிடுகின்றன. தனித்து எவரையும் குறிப்பிடுவதோ, படத்தின் நிறைகுறைகளை விஸ்தாரமாக எடுத்தியம்புவதோ

## எகிப்திய நிலைகள்மீது

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கருதப்படுகின்றது.

# எகிப்திய நிலைகள்மீது இஸ்ரேல் நேரடித்தாக்குதல் ஏழு அரபுக்கள் பலியாகினர்

டெல்அவிவ், மார்ச் 15 சூயஸ்கால்வாய்க்கு குறுக்கே இஸ்ரேலிய கொமாண்டோ அணியொன்று நேரடியாகவே ஊடுருவிப் பாய்ந்து ஐக்கிய அரபுக் குடியரசு ராணுவ நிலைகள் மீது கடும் தாக்குதல் ஒன்றை நடத்தியுள்ளது. இந்தத் தாக்குதலில் ஏழு அரபுக்கள் கொல்லப்பட்டதாகவும் இரு இஸ்ரேலியர் மாண்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

இஸ்ரேலியரின் இந்தத் தாக்குதல் முயற்சி முறியடிக்கப்பட்டதாகவும் அரபுக்களில் ஒருவர் மட்டுமே பலியானதாகவும் எகிப்தியர் அறிவித்தனர்.

அரபு இஸ்ரேல் பெரிய சண்டைக்குப் பின்னர் இஸ்ரேலியர் நேரடியாக அரபுக்களுடன் சூயஸ்கால்வாயின் குறுக்கே ஊடுருவி மோதிக் கொண்டது இதுவே முதல் தடவையென்று கூறப்படுகின்றது.

### ஈபான் கூற்று ரஷ்யா ஆட்சேபம்

சோவியத் யூனியனில் யூதர்கள் கொடுமைப்படுத்தப்படுவதாக இஸ்ரேலிய வெளிநாட்டு அமைச்சர் தெரிவித்திருப்பது சம்பந்தமாக ஐ. நா. சபை அங்கத்தவர்களுக்கு அறிக்கைகள் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் திரு. அபாஈபானின் கருத்துக்கள் ஐ நா. தஸ்தாவேஜுகள் விநியோகிக்கப்பட்டிருப்பதாகவும் சோவியத்யூனியன் ஐ. நா.விடம் ஆட்சேபம் தெரிவித்திருக்கின்றது. சோவியத் யூனியனின் உள்நாட்டு விவகாரங்களில் இஸ்ரேல் தலையிடுகிறதென்றும் ரஷ்யா குற்றஞ்சாட்டியிருக்கின்றது

### அரபு நாடுகள் உறுதி

சர்வதேச விமானப் போக்குவரத்துக்களுக்கு பாதுகாப்பளிப்பதற்கு அரபு நாடுகள் தயாராய் இருப்பதாக ஜோர்டான் அறிவித்திருக்கின்றது.

## எஸ். எஸ். ஆர். போட்டி: டில்லிமேல்சபைக்கு

சென்னை, மார்ச் 15 நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன் திராவிடமுன்னேற்கழகத்தின் சார்பில் மத்திய ராஜ்யசபைக்குப் போட்டியிடவிருக்கிறார்.

டில்லியிலுள்ள மேல் சபைக்கு 9 காலி இடங்கள் இருக்கின்றன. இவைகளில் மூன்று இடங்களுக்கு தி. மு. க. போட்டியிடும். நடிகர் எஸ் எஸ் ராஜேந்திரன், காஞ்சி கல்யாணசுந்தரம், டி கே சீனிவாசன் ஆகியவர்கள் போட்டியிடுவார்கள். இதுபற்றி தி. மு. க. ஆட்சி மன்றக்குழு முடிவு செய்திருக்கின்றது.

தமிழ்நாடு மேல்சபைக்கு என் நடராசன், சி பி சிற்றரசு, மன்னை ப நாராயணன், கோவை ராசமாணிக்கம், நீல நாராயணன் ஆகியவர்கள் போட்டியிடுவார்கள்.

டில்லி மேல்சபைக்கு இந்திரா காங்கிரஸின் சார்பில் திரு சி சுப்பிரமணியமும் போட்டியிடவிருக்கிறார்.

கம்போடியாவை

## பேச்சு நடத்த அழைக்கிறது வடவியட்னும்

நாம்பென், மார்ச் 15 கம்போடியாவுக்கும்- வடவியட்னமுக்குமிடையிலுள்ள கருத்து வேற்றுமைகளைப் பேச்சுவார்த்தைமூலம் தீர்த்துக் கொள்ளலாமென்று வடவிட்னம் யோசனை தெரிவிக்கின்றது.

கம்போடியாவிலிருந்து வடவியட்னம்- வியட்காங் துருப்புகளை உடனே அகற்றிக் கொள்ளும்படி கம்போடியா காலக்கெடுவிதித்ததைத்தொடர்ந்து மேற்படி யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

கம்போடியாவில் அண்மையில் வட வியட்னமுக்கெதிராக ஆர்ப்பாட்டங்கள் வடவியட்னம், வியட்காங்தூதரகங்கள்மீது ஆர்ப்பாட்டக்காரர்கள் கடும்தாக்குதல்கள் நடத்தி பொருள் நஷ்டம் ஏற்படுத்தினார்கள். இதைத் தொடர்ந்து கம்போடியாவிலுள்ள வடவியட்னம் துருப்புகளையும் வியட்காங் துருப்புகளையும் விலக்கி கொள்ளுமாறு கம்போடியா உத்தர விட்டது. அதற்கான காலக்கெடுவு அறிவிக்கப்பட்டது. அதன்பின்னர் இருநாடுகளுக்குமிடையிலான கருத்து வேறுபாடுகளைப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக்கொள்ளலாம் என்றும் இப்பேச்சுக்களை உடனே ஆரம்பிக்கலாம் அல்லது கம்போடியாவுக்கு வசதியான சமயத்தில் வைத்துக்கொள்ளலாம் என்று வடவியட்னும் தெரிவித்திருக்கின்றது காலக்கெடு முடிவடைந்துவிட்டபோதிலும் கம்போடியாவிலுள்ள வடவியட்னும், வியட்காங் துருப்புகள்விலக்கிக் கொள்ளப்பட்டு விட்டனவா அல்லமிவியட்னமுடன் பேச்சுகள் நடத்த கம்போடியா ஒப்புக் கொண்டுவிட்டதா என்பதைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. கம்போடிய அதிபர் இளவரசர் சிகனூக் இப்பொழுது மாஸ்கோவிலில் இருக்கிறார். அவர் பீகிங்கிற்கும் போவார்.

## யாருடைய கூப்பன்?

யாழ்ப்பாணம், நாவலர் வீதியைச்சேர்ந்த திரு கே. கிருஷ்ணசாமி என்பவரால் பருத்தித்துறை வீதியிலிருந்து ஒரு கூப்பன் புத்தகம் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் காரியாலய நேரத்தில் வந்து அத்தாட்சி காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

...ர். இச்சபை உறுப்பினர்களின் தகுதிபற்றி காரியாதிகாரியின் சிபார்சு கிடைத்ததும் சபை உறுப்பினர்கள் நியமனம் பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகி...

### இடமாற்றம்

கடந்த மூன்று வருடங்களாகமூதூர்ப்பகுதிகாரியாதிகாரியாகக் கடமையாற்றிய பிரம்மஸ்ரீ சாம்பசிவ ஐயர் திருமலைப்பிரிவுக் காரியாதிகாரியாக இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார். இவரின் இடத்துக்கு திரு. காங்கேயன் நியமிக்கப் பட்டுள்ளார்.

### கடமைகள் பாதிப்பு

மூதூர் காரியாதிகாரி கந்தோரைச் சேர்ந்த லிகிதர்களான திரு. எஸ். குலசிங்கம், ஜனுப் ஆப்தீன் ஆகியோர் இடமாற்றம் செய்யப்பட்டுச் சென்றபின் இவர்களுடைய இடத்துக்கு புதிய லிகிதர்கள் இன்னும் வராததனல் காரியாலயக் கடமைகள் பாதிக்கப்படுவதுடன் பொதுமக்களும் அவஸ்தைக்குள்ளாகியுள்ளனர்.

### ஆசிரியர்கள் அதிருப்தி

திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் குறைகளையும், தேவைகளையும் உடனுக்குடன் தீர்த்து வைக்க, பிராந்திய கல்விக் கந்தோரும், மாவட்ட கல்விக்கந்தோரும் தாமதம் காட்டுவதாக ஆசிரியர்கள் பலரும் அதிருப்தி அடைகிறார்கள். சில ஆசிரியர்களின் நிலுவைப் பணத்தைக் கேட்டு பிராந்திய கணக்காளருக்கு எழுதியும் அதனல் பலன்கிடைக்காது பலரும் திண்டாடுகின்றனர். இது சம்பந்தமாக மேலிடம் தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி ஆசிரியர் வட்டம் கோருகிறது.

### ஆறு அபேட்சகர்கள்

எதிர்வரும் பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் மூதூர்த் தொகுதியில் ஆறு அபேட்சகர்கள் வரையில் போட்டியிடலாம் என நம்பப் படுகிறது.

## புதிய ஜே. பி.

உடுப்பிட்டி, ஞாயிறு அல்வாய் தெற்கு இலகடி என்னும் இடத்தைச் சேர்ந்த திரு. கே. சண்முகம் புதிய சமாதான நீதிபதியாகச் சத்தியப்பிரமாணம்செய்துகொண்டார். ஓய்வு பெற்ற தபால் அதிபரான இவர் சிறந்த சமூக சேவையாளரும், சைவ அபிமானியும் ஆவார்.

...வர்பாடசாலைக்குத் ...ம்மாலியன்ற உதவிகளைச் செய்யத்தயாராக விருப்பதாகவும் சாவகச்சேரி பட்டின சபைத் தலைவர் திரு. சு. கனகரத்தினம் நேற்று முன்தினம் மீசாலை கி...முன்னேற்றச்சங்க மண்டபத்தில் நடைபெற்ற யாழ் இளைஞர் கழக பாலர் பாடசாலையைத் திறந்துவைத்துப்பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. ஜெயேந்திரனின்வரவேற்புரையுடன் ஆரம்பமான இவ்விழாவில் திரு இரத்தினகோபால் பேசுகையில் யாழ். இளைஞர்கழகம் இதுபோன்ற பத்து பாட... அதிபர், திரு. சிவப்பிரகாசம் உரையாற்றுகையில் அவுஸ்திரேலியாவில் சிறுவர் கல்வி வகுப்பறையோடு மட்டும் நிற்காமல் சுற்றுலா கண்காட்சிபோன்ற உற்சாக மூட்டக்கூடிய வகைகளில் செயற்பட்டுவருவதாகவும், அதே முறையை நமது சிறுவர்பாடசாலைகளும் பின்பற்றவேண்டுமெனவும் கூறினர்.

திருவாளர்கள்செல்லப்பா கே. முருகேசு ஆகியோரும், செல்வி என் சதாசிவம் உட்பட மற்றும் பலரும் சொற்பொழிவாற்றினர்.

## '7 லட்சம் ஏக்கர் தரிசு நிலம் பயன்பெறும்'

குருநாகல், ஞாயிறு 'வடக்கே பாயவிருக்கும் மகாவலி கங்கையால் ஏழு லட்சம் ஏக்கருக்கு மேற்பட்ட தரிசு நிலங்கள் விவசாய நிலங்களாகவிருக்கின்றன. இன்னும் கங்கைதரும் மின்சாரத்தால் ஏராளமான கைத்தொழில்கள் மேம்படவுமிருக்கின்றன,'

குருநாகல் மாவட்ட தமிழ் முஸ்லிம் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட, விளையாட்டுப்போட்டியில் தேசியக்கொடியை ஏற்றி வைத்துப்பேசிய தேசிய சேவை விளையாட்டு உதவி அமைச்சர் திரு ரி. பி, வெலகெதர தெரிவித்தார்.

எல்லாமாக 40க்கு மேற்பட்ட தமிழ் முஸ்லிம் பாடசாலைகள் பங்குபற்றிய இவ் விழாவில் பிரதம அதிதியாக பங்குபற்ற வந்த அவரை ஏராளமான மாணவ மாணவிகள் அணிவகுத்து வரவேற்றனர்.

திரு. வெலகெதர மேலும் பேசுகையில் சர்வதேச விளையாட்டரங்கில் நம்மவரும் பங்குபற்றி வெற்றிபெற வேண்டுமென்பதற்காக அரசாங்கம் விளையாட்டுத்துறையில் எடுத்துவரும் முயற்சிகள் கொஞ்சநஞ்சமல்ல என்றார்.

வட்டாரக் கல்வி அதிகாரி உட்பட மற்றும்பலர் விழாவில் உரையாற்றினர்.

## இடமாற்றம்

வல்வெட்டித்துறை, ஞாயிறு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில்லிகிதராக கடமையாற்றிவரும் திரு. வி. நாகராசா அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் யாழ்ப்பாணம் சிறுவர் நலன் நல்லொழுக்க பாதுகாப்புக் கந்தோருக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவரது இடத்துக்கு கொழும்பு பண்டசாலைக் கந்தோரைச் சேர்ந்த திரு. சி. பாலசிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

0 0 0

வல்வைரோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றி வந்த திரு. க அருளானந்தம் இம்மாதம் தொடக்கம் திக்கம் சித்திவிநாயகர் பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## வங்கியாளர் பயிற்சி பரீட்சை

கொழும்பு, ஞாயிறு வங்கியாளர் பயிற்சி நிலையத்தின் நடுத்தராதரப் பரீட்சை தமிழ் மொழியிலும் கொழும்பிலும், மற்றும் பிரதான இடங்களிலும் மே 6ந் திகதி தொடக்கம் 12ந் திகதிவரை நடைபெறும் இப் பயிற்சிக்கான விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் 31ம் திகதியென்றும் இப்பரீட்சையின் முழு விபரங்களைத்தரும் விண்ணப்பப் படிவங்கள் வங்கியாளர் பயிற்சிநிலையத்திலிருந்து கிடைக்குமென்றும் அறிவிககப்பட்டுள்ளது.

## உடுவிலில் நோன்மதி விழா

யாழ்ப்பாணம், திங்கள் உடுவில் திறந்த வெளி அரங்கில் இம்மாதம் 22-ம் திகதி மாலை நடைபெறவிருக்கும் நோன்மதிவிழாவில் சுன்னுகம் கோட்டைக்காடு கலைமன்றத்தாரால் உருவாக்கப்பட்ட 'வேடிக்கை உலகம்' என்னும் நாடகமும், வேல்நாதன் குழுவினரின் இன்னிசைக் கச்சேரி உட்பட பல கலைநிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன.

...கையில் கூறினர்.

''படத்தில் குறைகள் காணப்படுமானால் அவைகளைப் பெரிதுபடுத்தாமல் நம்நாட்டுப் படம் என்ற வகையில் ஆதரிக்க வேண்டும்'' என்றுஅவர் கேட்டுக் கொண்டார்.

பல்வேறு மாதிரியான படங்களையும் பார்த்துப் பழகிப்போன ரசிகர்பெருமக்களுக்கு 'மஞ்சள் குங்குமம்' புதிய அனுபவம் ஒன்று கொடுக்கும் என்பதில் ஐயமில்லை. முழுக்க முழுக்க ...கிறார்கள்.

ஆங்காங்கே நமது கலைஞர்களின்சிறப்புகள் பளிச்சிடுகின்றன. தனித்து எவரையும் குறிப்பிடுவதோ, படத்தின் நிறைகுறைகளை விஸ்தாரமாக எடுத்தியம்புவதோ எனதுநோக்கமல்ல.

நம்மவர் முயற்சி என்ற வகையில் தமிழ் பெருமக்கள் இப்படத்தைக்குடும்ப சகிதம் சென்று ஒருதடவையாகுதல்பார்த்துஆதரவளிக்கவேண்டும்.

—பேறு

## வேலணையில் இலக்கியக் கருத்தரங்கம்

வேலணை, ஞாயிறு ''சில வகை இலக்கியங்கள் மக்கள் உணர்ச்சியைத் தூண்டி மக்களிடையே வாழ்க்கைப் பாதையில் தவறுகளை ஏற்படுத்தி சமூகத்தில் ஒழுக்கக்குறைவை ஏற்படுத்துகின்றன. நல்ல கருத்துகளைத் தகுந்த உவமானங்களோடு மனதில் பதியத்தக்க வகையில் எடுத்துக் காட்டும் இலக்கியங்கள் சமுதாயத்தில் ஒழுக்கத்தையும் அறிவு விருத்தியையும் ஏற்படுத்துகிறது. எனவே தரமான இலக்கியங்களைப் படித்து மாணவர்களும், பெரியோர்களும் முன்னேற கலைமகள் சனசமூகநிலையத்தைப் பின்பற்றி ஏனைய நிலையங்களும் செயலாற்றவேண்டும்'' என வேலணை கலைமகள் சனசமூகநிலையத்தின் ஆதரவில் நிலைய மண்டபத்தில் நடைபெற்ற இலக்கியக் கருத்தரங்கின்போது வடபகுதிச் சனசமூகநிலையங்களின் மேற்பார்வையாளர் திரு. வி. கிருஷ்ணசாமி உரையாற்றுகையில் கூறினர்.

சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் திரு. சி. இராசரத்தினம் கருத்தரங்கிற்குத் தலைமைவகித்தார்.

வேலணைக் கிராமசபைத் தலைவர் திரு. க. சதாசிவம் சிரமதானம் பற்றிப் பேசுகையில், முயற்சியைத் தானமாக அளிப்பதுதான் சிரமதானம் என்றும், சிரமதான இயக்கம் தற்சமயம் மாவுக்கும், சீனிக்கும் வேலை செய்யும் இயக்கமாக மாறிவருவதாகவும், அதனல் சிரமதானம் என்ற பெயருக்கே இழுக்கு ஏற்படுகிறதென்றும், கிராமத்தைப் பாதுகாக்கவேண்டியதொண்டர்கள் சனசமூகநிலையத்தினர்தானென்றும், சமூகத் தொண்டர்கள் தங்கள் நோக்கத்திற்குமாருக இழுக்கையும், போட்டியையும் ஏற்படுத்திச் சமூகத்தைக் கூறுபடுத்திச் சமூக ஒற்றுமையையும், சமூக வளர்ச்சியையும் பாதிக்கும்வகையில் சமூகத்தை இட்டுச் செல்வதாகவும் சொன்னர்.

திரு. ஐ பொன்னையாவும் பேசினர். சனசமூகநிலையப் பிரதிநிதிகளடங்கிய மகாநாடொன்றும் நடைபெற்றது.

## மேலதிக மாவு கிடைக்கும்

கோட்டை, ஞாயிறு இவ்வருடம் பெப்ரவரி மாதம் பாரிஸில் நடைபெற்ற இலங்கைக்குதவும் நாடுகளின் கூட்டத்தையொட்டி தற்போது இலங்கைக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்குமிடையில் மேலதிக கோதுமை மா வழங்குவத சம்பந்தமாகபேச்சுவார்த்தை நடைபெறுகின்றது.

1969ம் ஆண்டு இலங்கைக்கு2,00000 தொன் மாவை ஐக்கிய அமெரிக்கா வழங்கியது. 1968ம் ஆண்டு ஜூன் மாதத்திலும் 1969ம்ஆண்டு பெப்ரவரிமாதத்திலும் இரு நாடுகளும் கைச்சாத்திட்ட ஒப்பந்தங்களின் பேரிலேயே மேற்படிமாவு வழங்கப்பட்டது.

இவ்வருடம் ஜனவரியிலும் வெள்ள அகதிகளுக்காக அமெரிக்கா 10,000 தொன்மாவை விசேஷ அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

## ஜன சக்தி ச.ச.நி. தீர்மானம்

யாழ்ப்பாணம், திங்கள் நல்லூர் அரசடி ஜன சக்தி சன சமூக நிலையம் நிலையத் தலைவர் திரு. ச. பூவிலிங்கம் தலைமையில் கூடிய போது நிலையத்தின் 21 வது ஆண்டு விழா பரந்த அடிப்படையில் கொண்டாடுவதென்றும் அடுத்த மாதம் 19-ம்திகதி கரபந்தாட்டம், சைக்கிள் ஓட்டப்போட்டியும், 20-ம் திகதி விளையாட்டு, விநோத உடைப்போட்டியும், 21-ம் திகதி அமரர்தெய்வேந்திரம் அரங்கில் 'திருவிளையாடல்', 'கட்டபொம்மன்', 'காதல் பலி' முதலிய நாடகங்களை மேடையேற்றுவதென்றும் தீர்மானித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

பொதுஜன அபிப்பிராயம் உருவாகாதிருக்கையில் சட்டம் நிறைவேற்றுவது தலைவர்களுக்கு மக்கள் தொண்டில் ஈடுபாடு இல்லாததையே காட்டும்.

— மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் மாசிமாதம் 3-ந் திகதி (16-3-70)


## பயனுள்ள யோசனை

வழக்கு விசாரணைகளில் ஏற்படும் அநாவசியமான காலதாமதத்தைத் தடுப்பதற்கு சுப்ரீம் கோர்ட் நீதியரசராக இருந்து ஓய்வுபெறும் திரு. சிவசுப்பிரமணியம் ஒரு யோசனை தெரிவித்திருக்கிறார். வழக்குகளிலும் அப்பீல் வழக்குகளிலும் வாதி தரப்பிலும், பிரதிவாதி தரப்பிலும் ஏற்படும் வழக்கறிஞர்கள் தங்கள் தங்கள் தரப்பு நியாயங்களையும் வாதங்களையும் நீதிபதிகளுக்கு எழுத்தில் முதலில் சமர்ப்பிக்கலாமென்பதும் அவற்றிலுள்ள சில அம்சங்களை வழக்கறிஞர்கள் நேரில் விளக்கலாமென்பதும் தான் அவர் கூறிய யோசனையாகும். இந்த யோசனையை நீதியரசர்களுடன் வழக்கறிஞர் சங்கம் கலந்தாலோசனை செய்த பின், சட்டத்தில் தேவையான திருத்தம் செய்வதற்காக சட்டத்திருத்தக் கமிஷனுக்குத் தெரிவிக்கலாம் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

பல வழக்குகள் பல வருடங்களாக முடிவடையாமல் நீதிமன்றங்களில் தேங்கிக் கிடக்கின்றன. தவணைக்கு மேல் தவணை போடப்படுகிறது. வாதிதரப்பினரும் பிரதிவாதி தரப்பினரும் பலவித கஷ்ட நஷ்டங்களுக்குள்ளாகிறார்கள். இந்த வழக்குகளில் சாட்சியாக உள்ளவர்களும் வீண் தொல்லைக்குள்ளாகிறார்கள். வழக்கு விசாரணைகள் நீடித்து, காலம் வீணாவதால்தான் நீதிமன்றத்தைப்பலர் நாடவும் அஞ்சுகின்றனர். துரிதமாக வழக்குகளை விசாரணைசெய்து தீர்ப்பளிப்பதற்கு நடவடிக்கை எடுக்காவிடில் நமது நீதிபரிபாலனத்துறை நிர்வாகத் தகுதி மீது மக்கள் நம்பிக்கையை இழக்கக்கூடிய காலம் விரைவில் வரலாம் என்று திரு. சிவசுப்பிரமணியம் சரியாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

வழக்குகளில் இருதரப்பிலும் ஏற்படும் வழக்கறிஞர்கள் நீண்ட நாட்களுக்கு வாதப்பிரதிவாதங்களில் ஈடுபடுவதும், பல வழக்குகளில் ஏற்படவேண்டியிருக்கும் வழக்கறிஞர்கள் ஒரே சமயத்தில் இரண்டு நீதிமன்றங்களில் சமுகமளிக்க முடியாத நிலையும் வழக்கு விசாரணைகள் காலதாமதமாவதற்குச் சில காரணங்கள்.

திரு. சிவசுப்பிரமணியம் நீதிபரிபாலன சேவையில் நல்ல அனுபவமுடையவர்; நீதிபதிகள் வழக்கறிஞர்கள் மற்றும் பலரின் நம்பிக்கையையும் நிறையப்பெற்றவர். அவர் கூறியுள்ள இந்தப் பயனுள்ள யோசனையைச் செயல்படுத்த வழக்கறிஞர் சங்கமும் நீதி அமைச்சும் முன்வருமென்று நம்பலாம்.

## மேற்கு வங்காளம்

வட இந்தியாவிலுள்ள முக்கிய மாநிலமான மேற்கு வங்காளத்தில் இது வரை 'அக்கப்பாடு பட்டி ஆட்சியிலிருந்த முதன் மந்திரி அஜோய் முக்கர்ஜி, இனியார் சொன்னாலும் கேட்கமாட்டேன்முதன் மந்திரி பதவியைத்துறந்தே தீருவேன்'' என்று சபதம் செய்து இன்று பதவியை ராஜிநாமாச் செய்யவிருக்கிறார். அவரின் தலைமை

ஆட்சிக்கு வருவார்கள்? இந்திய மார்க்ஸிஸ்ட்கம்யூனிஸ்ட் கட்சியினர் தாங்கள் ஆட்சி அமைக்க முடியுமென்றும் தங்களுக்குப் போதிய பலம் இருப்பதாகவும் கூறுகின்றனர். மார்க்ஸிஸ்டுகளின் உதவியில்லாமல் யாரும் ஆட்சி பீடத்திலமரும் நிலையில்லையென்றும் அங்கு ஜனாதிபதி ஆட்சியை ஏற்படுத்துவதைத் தவிரவேறுவழியில்லையென்று பதவிதுறக்

# "நமது நாட்டு எழுத்தாளர்களுக்கு வசதிகள் அளிக்கவேண்டும்"

## யாழ். இலக்கியவட்ட ஆண்டுவிழாவில்

### கவிஞர் கந்தவனம் உரை

யாழ்ப்பாணம், திங்கள்

சினிமா பார்ப்பதற்காக எவ்வளவோபணத்தைவீணாகச் செலவு செய்யும் வாலிபர்கள் அப்பணத்தைக் கொண்டு, ஈழத்து எழுத்தாளர்களின் நூல்களைவாங்கிப் படிக்கவேண்டும். இதன் மூலம் ஏழை எழுத்தாளர்களுக்கு மட்டுமன்றி, ஈழத்தின் இலக்கியவளர்ச்சிக்கும் பெரிதும் உதவுவதாக கருத முடியும்.

யாழ் இலக்கிய வட்டத்தின் நான்காவது ஆண்டு நிறைவு விழாவிற்கு தலைமை வகித்த கவிஞர் வி.கந்தவனம் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்ப்பாணம் திறந்தவெளி அரங்கில் நடந்த இவ்விழாவில் செந்தமிழ் மணி பொ.கிருஷ்ணபிள்ளை பாராட்டப்பட்டார். இரசிகமணி கனகசெந்திநாதன் பாராட்டுரை வழங்கினார், கவிஞர் வே. ஐயாத்துரை பாராட்டு பாமாலை வழங்கினர்.

தலைவர் திரு.கந்தவனம் கூறியதாவது' இலக்கியம் நமது வாழ்க்கைப்பிரச்னைகளைச் சித்தரிப்பதாகும். அதனால் இலக்கிய நூல்களை வாங்கிப்படிப்பதன் மூலம் ஒவ்வொருவரும் பயனடையலாம் தமிழ்க்கலையையும் பண்பாட்டையும் பேணிக் கட்டிக்காத்து வளர்க்க வேண்டிய பொறுப்பு எழுத்தாளர் கையில்தான் உண்டு அப்படியான எழுத்தாளர்களை மக்கள் போற்றி பாராட்ட வேண்டும்.

யாழ் இலக்கிய வட்டம், இலக்கிய வளர்ச்சியில் அக்கறை காட்டுவதோடு இலக்கிய நூல்களை வெளியிடுவதில் ஆர்வம்காட்டி வருகிறது. கடந்த 4 ஆண்டுகளில் 15 நூல்களை வெளியிட்டிருக்கிறது. ஈழத்து நூல்கள் வேறு எந்த நாட்டின் நூல்களிலும் பார்க்க தரத்தில் குறைந்ததல்ல வென்பதை தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டு விட்டது.

இலக்கியக்கலை எல்லாக் கலைகளிலும் சிறந்தது; முக்கியம் வாய்ந்தது. அது தனியான ஒருகலை. இலக்கிய கர்த்தாக்களைப் போற்றுவது மக்களின் கடமையாகும். மேற்கு நாடுகளில் இலக்கிய கர்த்தாக்களுக்கு தினமும் பாராட்டு வழங்கப்படுகிறது சில நாடுகளில் எழுத்தாளர் வாழும் வீதிகளில் 'அமைதியாகச் செல்லுங்கள்' என்று விளம்பரம்போட்டிருக்கிறார்கள். அமெரிக்காவில் 4 நிமிஷத்திற்கு ஓர் இலக்கிய நூல் விற்பனையாகின்றது. நமது நாட்டிலும் இலக்கிய கர்த்தாக்களுக்கு சகலவசதிகளும் செய்து கொடுக்கப்படவேண்டும்''

செந்தமிழ்மணி பொன். கிருஷ்ணபிள்ளைக்கு பாராட்டுரை வழங்கி இரசிகமணி கனகசெந்திநாதன் பேசுகையில் சிலர் புகழை விரும்பி ஓடிக்கொண்டிருக்கும் இவ் விளம்பர யுகத்தில், ஒரு விளம்பரத்தையுமே விரும்பாது. பருத்தித்துறையில் ஓர் ஒதுக்கமான இடத்தில் தானுண்டு தன் பணிஉண்டு என்று அமைதியாக வாழ்ந்து வருபவர்தான் செந்தமிழ் மணி என்றார்.

கவிஞர் வி. கந்தவம் எழுதிய கீரிமலையினிலே என்ற காவியநூல் இவ் விழாவில் வெளியிடப்பட்டது.

## துயரம் நிறைந்த கச்சதீவு யாத்திரை (3)

# கொதித்த வயிற்றுக்கு உணவளித்து ஆற்றினர்

(போயா முன்தின தொடர்ச்சி)

நீர்கொழும்புக் குடும்பத்தைக் கச்சதீவில் சந்திப்பதற்காக இந்தியாவில் இருந்து ஒருவர் வந்திருந்தார். அந்தக் குடும்பத்தினரையண்டி அவர்களைப் பற்றி விசாரித்தேன்

இந்தியாவில் இருந்து வந்திருந்தவர் ஒருகாலத்தில் நீர்கொழும்பில் நகைக்கடை முதலாளியாக இருத்ததாகவும், அப்போது இந்த நீர்கொழும்பு குடும்பத்தில் மூத்த பெண்ணைத் திருமணம்செய்து ஏழுவருடம் வாழ்க்கை நடாத்தியதாகவும். 6 பிள்ளைகள் பிறந்து ஆறாவது பிள்ளைக்கு நாலாவது மாதம் நடந்தபோது கருணையுள்ள நமது அரசாங்கம் அவரை 'விஸா' முடிந்துவிட்டதெனக்கூறி இந்தியா அனுப்பி வைத்ததாகவும்

வர்களும், தாகத்தால் சோர்ந்து விழுபவர்களும் அங்கு கூடிவிட்டனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்த ஒரு குடும்பத்தினரும், வவுனியாவில் இருந்துவந்த குடும்பத்தினரும் சேர்ந்து தங்கள் விடுதிகளுக்குப் பக்கத்தில் தங்கியிருந்த பலருக்குப் பகலும் இரவும் உணவளித்தனர். ஒரு கொத்து அரிசி 2ரூபா வீதம் அங்கு விற்றது பலருக்கும் ஆறுதலாக இருந்தது. ராமேஸ்வரத்தில் இருந்து வந்திருந்த மீனவர்கள் உப்புப் போட்ட மீன்களைப் பலருக்கும் கொடுத்துதவின[illegible] பதிலாகப் பணம் பெற்றுக்கொள்வதற்கு அவர்கள் மறுத்துவிட்டனர்.

நாள் கணக்காக அலையுடன் போராடி இயந்திரமற்ற வள்ளத்தை 'பாயின்' உதவியுடன் செலுத்தி மீன்

எல். ஸி. படித்திருப்பதாகவும், வேலை தேடிக் கிடைக்காததனால் குடும்பக் கஷ்டத்தை நீக்கவேண்டி வளையல் வியாபாரம் செய்வதாகவும் கூறினார்.

**ஊருக்குத் திரும்பினேம்**

எமது துயரம் நிறைந்த கச்சதீவு யாத்திரை பற்றிக் கூறிக்கொண்டிருந்த நான், உங்களைக் கச்சதீவிலேயே உலவவிடுவது, உங்கள்

**வி.இன்னாசிமுத்து**

பொறுமையைச் சோதிப்பதாக முடியுமென்பதால், நாம் இலங்கை திரும்பிய வரலாற்றைக் கூறலாமென எண்ணுகின்றேன்

ஊர்காவற்றுறைத் துறை[illegible] பிரயாணி[illegible] கொண்டுசெல்வதற்காக, கச்சதீவு மறு கரையி[illegible]

யாணிகளுடன் புறப்பட்டுக் கோயில் முன் பாகத்தை அடைந்த மகாலட்சுமி படகைப் பலயாத்திரிகர்கள்முற்றுகையிட்டனர். கழுத்தளவு தண்ணீரில் அந்தப்படகு நின்றுகொண்டிருந்தது கரையில் நின்ற பெண்ணொருவர் என்னை அணுகி தனது கைக் குழந்தையை என்னிடம் தந்து 'தம்பி எங்களையும் ஏத்தி விடுங்கோ' என்றார். நான் குழந்தையை வாங்கிகொண்டேன் அந்தப் பெண்ணும், கணவனும் படகில் ஏறியபின்பு நான்பிள்ளையை அவர்களிடம் கொடுப்பதற்காக படகினை நோக்கி நடந்துபோக அலையொன்று வேகமாக வந்தது குழந்தையை தலைக்குமேல் தூக்கிப்பிடித்தேன். அலை எனது முகத்தில் மோதியது நான் பின்பக்கமாகச் சரிந்துவிழுந்தபோது, எனது கையில் இருந்த குழந்தையை இளைஞர் ஒருவர் படாரெனஎடுத்துகொண்டார். என்னை சுமார் 35 வயது மதிக்கத்தக்க ஒருவர் தாங்கிப்பிடித்துக்கொண்டார்.

யாத்திரிகர்களைப் படகில் ஏற்றுவதிலும், பொருட்களைப் படகில் ஏற்றுவதிலும் உதவி செய்தவர்களை பலரும் வெகுவாகப் பாராட்டினர்

கஜபாகு கப்பலில் நடந்தது என்ன? நாளைய இதழில்

# 'அமரர் இராஜரத்தினத்துக்கு மணிமண்டபம் வேண்டும்'

சித்தன்கேணி, ஞாயிறு

''இந்துபோட் இராசரத்தினத்தை அறியாத தமிழாசிரியர்கள் இருக்கவே முடியாது. அவர் சைவசமயத்தை வளர்ப்பதற்காக எத்தனையோ எதிர்புகளுக்கிடையே சைவப் பாடசாலைகளை ஆரம்பித்து சைவமாணவர்கள் சுதந்திரமாகக் கல்வி கற்க வைத்தவர். நேர்மையாகவும் நியாயமாகவும் வாழ்ந்ததனாலேயே அவருக்கு ஒரு ஜே. பி. பட்டம் கூடக் கிடைக்கவில்லை சைவத்துக்கும் தமிழுக்கும் பெருந்தொண்டாற்றிய திரு இராசரத்தினம் பந்தம் பிடித்திருந்தால் ஏராளமான பட்டம் பதவிகளுடன் வாழ்ந்திருக்கலாம். இத்தகைய பெருமை வாய்ந்த பெருமகனின் இழப்பை யாருமே நிரப்பமுடியாது''

இவ்வாறு, சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் 'இந்துபோட்' இராசரத்தினம் மறைவுகுறித்து நடாத்தப்பெற்ற அநுதாபக் கூட்டத்தில் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய அதிபர் திரு. பரம்தில்லைராசா எம். ஏ. தலைமை தாங்கிப் பேசும்போது கூறினார்.

திரு. நா. ஞானசம்பந்தன் பேசுகையில் இந்துபோட் இராஜரத்தினம்போல வேறு எந்ததனிநபரோ அல்லது சமயஸ்தாபனமோ ஏராளமான பாடசாலைகளை உண்டாக்கவில்லை. சைவ ஆசிரியர்கள் ஆசிரிய பயிற்சி பெறுவதற்கு சைவ ஆசிரிய கலாசாலை ஒன்றை ஆக்கிவைத்த பெருமதிப்புக்குரியவரும் இராசரத்தினமே 'இந்துபோட்' இராசரத்தினத்திடமிருந்து பாடசாலைகளை அரசாங்கம் கையேற்காமல் விட்டிருந்தால் இன்னும் எத்தனையோ சைவப்பாடசாலைகளை அவர் உண்டாக்கியிருப்பார். பட்டதாரிகளின் வேலையில்லாத் திண்டாட்டமும் நீங்கியிருக்கும் அவர் செய்தசேவைகளை வருங்கால மாணவர்களும் அறியும்பொருட்டு அவர் பெயரில் ''மணிமண்டபம்'' ஒன்று உண்டாக்கி அதற்குள் அவரது சிலையும் நிறுதப்படவேண்டும் என்று கூறினார்.

திரு. இராஜரத்தினத்தின் ஆன்ம சாந்திக்கா வித்தியாலய ஆசிரியர்களும் மாணவ மாணவிகளும் மௌன அஞ்சலி செலுத்தினர்.

வவனியா மாவட்டத்தைச் சேர்ந்த புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் அப்பாடசாலைத் தாபகரும் சைவப் பெரியாருமாகிய திரு. சு. இராசரத்தினம் பிரிவுக்கு அனுதாபந் தெரிவிக்கும் முகமாக நடந்த கல்லூரி ஆசிரிய, மாணவ பொதுக்கூட்டத்தில், கல்லூரி அதிபர் திரு. கு. வி. செல்வத்துரை மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்தனை செய்யப்பட்டதுடன் அன்று பாடசாலையும் மூடப்பட்டது.

## அநாதை இல்ல தலையாய தர்மம்

யாழ்ப்பாணம், திங்கள்

'நாவலர் பெருமானுக்குபின் சைவசமயத்தைப் பேணிக் காத்து வளர்த்துக்கொண்டு வந்த பெருமை இந்துபோட் திரு. சு.இராசரத்தினத்தையே சாரும். சைவத்தின் பெயரால் நாவலர் பெருமான் நமக்கு அளித்தது சில பாடசாலைகளே திரு. இராசரத்தினம் கிட்டத்தட்ட 300 பாடசாலைகளை நிறுவிக் கல்வியையும் சமயத்தையும் வளர்த்தார். 25 ஆண்டுகளுக்கு முன் நமது நாட்டில் சைவ ஆசிரிய பயிற்சிச் சாலைகளே கிடையாது. அப்படி ஒரேயொரு சைவாசிரிய கலாசாலையை ஆக்கித் தந்த பெருமையும் திரு. சு. இராசரத்தினத்தையே சாரும். அவர் ஒரு பிரபல அப்புக்காத்து. சைவபிமானி. சைவப் பணிக்கே தம்மை அர்ப்பணஞ் செய்து வாழ்ந்தவர்; உழைத்தவர்.

அவர் செய்த பணிகளுள் மிக மிகத் தருமமான பணி சைவ அநாதைசாலையாகும். தாய் தந்தையரற்ற எத்தனையோ குழந்தைகளை திருநெல்வேலியிலுள்ள அநாதைசாலையில் இன்றுவரை அமைத்துப் பேணிக் காத்து வந்தார். அவர் தேகவியோகம் அடைவதற்கு முதல் நாளும் அக்குழந்தைகளைக் கடைசியாகப் பார்த்துவிட்டே வந்தார்.

இவ்வாறு யாழ். வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் சைவப்பெரியார் 'இந்துபோட்' திரு. சு. இராசரத்தினத்தின் மறைவு குறித்துத் நடைபெற்ற அனுதாபக் கூட்டத்தில் பேசிய ஆசிரியர் திரு சி கார்த்திகேசு கூறினார்.

## 'சந்தன மரத்தை

## நாவலர் போன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னாலும் கேட்க மாட்டேன்முதன் மந்திரி பதவியைத்துறந்தே தீருவேன்'' என்று சபதம் செய்து இன்று பதவியை ராஜினுமாச் செய்யவிருக்கிறர். அவரின் தலைமையிலான கூட்டணி அரசாங்கத்தைச் சேர்ந்த மூன்று அமைச்சர்கள் நேற்றே தங்கள் ராஜினுமாவைச் சமர்ப்பித்துவிட்டார்கள்முதன்மந்திரியாகப் பதவிவகித்தும் மாநிலத்தில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களை அடக்கி ஒடுக்கமுடியாமல் சத்தியாக்கிரகமும் உண்ணுவிரதமுமிருந்து முதன்மந்திரிப் பதவியையே கேலிக்கூத்தாக்கிய திரு அஜோய் முக்கர்ஜி பதவியை முன்னரே துறந்திருந்தால் நன்ருக இருந்திருக்கும், இப்போதாவது பதவியைத்துறக்கத் துணிந்ததற்காக அவரைப் பாராட்ட வேண்டும்.

அஜோய் முக்கர்ஜியின் கூட்டணி ஆட்சி முடிந்தால் அதற்குப் பின் யார் மார்க்ஸிஸ்டுகளின் உதவியில்லாமல் யாரும் ஆட்சி பீடத்திலமரும் நிலையில்லையென்றும் அங்கு ஜனதிபதி ஆட்சியை ஏற்படுத்துவதைத் தவிரவேறுவழியில்லையென்று பதவிதுறக்கும் அஜோர் முகர்ஜி கூறுகிருர். டில்லிக்கு வந்து பிரதமரையும் மற்றும் காங்கிரஸ் தலைவர்களையும் அவர் சந்தித்துப் பேசியிருக்கிறர். மேற்கு வங்காளத்தில் மாற்று ஆட்சி ஏற்படுத்துவதற்கோ அங்குள்ள பிரச்னைக்குத் தீர்வுகாணவோ தம்மிடம் திட்டம் எதுவும் இல்லையென்று பிரதமரும் அறிவித்திருக்கிறர்.

மேற்கு வங்காளத்தில் கம்யூனிஸ்ட் ஆட்சி ஏற்படுமா, ஜனதிபதி ஆட்சி பிரகடனப் படுத்தப்பட்டு விரைவில் இடைக்காலத் தேர்தல் நடைபெறுமா? இன்னும் சிலதினங்களில் இதற்கு விடை கிடைத்துவிடும். ஆனாலும் அங்கு அமைதிக்குப் பெரும் சோதனைதான்.

வும். 6 பிள்ளைகள் பிறந்து ஆருவது பிள்ளைக்கு நாலாவது மாதம் நடந்தபோது கருணையுள்ள நமது அரசாங்கம் அவரை 'விஸா' முடிந்துவிட்டதெனக்கூறி இந்தியா அனுப்பி வைத்ததாகவும் அவர்கள் கூறினர்.

**உணவுப் பிரச்னை**

தேநீர்க் கடைகளை இம்முறை எங்குமே காணக் கிடைக்கவில்லை. சிலர் தங்கள் இருப்பிடங்களில் தோசை, பிட்டு முதலிய தின்பண்டங்களைசெய்து விற்றுக் கொண்டிருந்தனர்.

அவர்கள் எத்தனைபேருக்குத்தான் உணவளிக்கமுடியும். பசியால் துடி துடிப்ப

ன[..] பதிலாகப் பணம் பெற்றுக்கொள்வதற்கு அவர்கள் மறுத்துவிட்டனர்.

நாள் கணக்காக அலையுடன் போராடி, இயந்திர மற்ற வள்ளத்தை 'பாயின்' உத[..]யுடன் செலுத்தி மீன் பிடித்துக்கொண்டு செல்லும் அவர்களுக்கு வருடாந்தச் சம்பளமாக ரூபா நாநூறிலிருந்து ஐநூறுவரைதான் கிடைக்குமாம். அவர்களின் வாழ்க்கையைக் கேட்டபோது மனம் கலங்கச் செய்தது.

**வேலையில்லாப் பிரச்னை**

ராமநாதபுரத்தில் இருந்து கச்சதீவு வந்திருந்த ரவி என்ற இளைஞர் எஸ். எஸ்.

வரலாற்றைக் கூறலா[..]ன எண்ணுகின்றேன்

ஊர்காவற்றுறைத் துறைமுகத்திற்குப் பிரயாணிகளைக் கொண்டுசெல்வதற்காக, கச்சதீவு மறு க[..] லிருந்து அதிகாலையே[..]பிர

[..] ஏற்றுவதிலும், [..] களைப் படகில் ஏற்றுவதிலும் உதவி செய்தவர்களை பலரும் வெகுவாகப் பாராட்டினர்

கஜபாகு கப்பலில் நடந்தது என்ன? நாளைய இதழில் தொடரும்.

ஆன்ம சாந்திக்கா வித்தியாலய ஆசிரியர்களும் மாணவ மாணவிகளும் மௌன அஞ்சலி செலுத்தினர்.

மறைவு குறித்துத் நடைபெற்ற அனுதாபக் கூட்டத்தில் பேசிய ஆசிரியர் திரு சி கார்த்திகேசு கூறினார்.

## 'தீவுப்பகுதியில் மக்கள்வங்கி கிளைதிறக்கப்பட வேண்டும்'

யாழ்ப்பாணம், திங்.

'நமது தொகுதி பரந்த கடற்பரப்புடையது. அதை நம்பியே ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வாழ்கிருர்கள். ஆனுல் இதுவரைஅவர்களுக்கு உதவியளிக்கும்வகையில் ஒருமீன்பிடித் தொழிற்பேட்டையாவது நிறுவப்படவில்லை. மீனவர் தொழிற்பேட்டை நிறுவ இதுவரை காலமும் எந்த அரசியல்கட்சியும் முயற்சி எடுக்கவில்லை'

தம்பாசிட்டி காந்திஜீ சனசமூகநிலையத்தில் திரு. நா. தாமோதரம்பிள்ளை தலைமையில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் சர்வோதய அரசியல் முன்னணித் தலைவர் திரு.பி. கதிரவேலு பேசும்போது மேற்கண்டவாறு கூறினுர்.

திரு. கதிரவேலு மேலும் கூறியதாவது:-வாய்ப்பேச்சுகளாலும் கூட்டம் போடுவதாலும் நேரத்தைப் போக்காமல் செயலில் இறங்க வேண்டும் இப்பகுதி தொழிலாளர்களின் நல்வாழ்விற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் மக்கள் வங்கியிருப்பதால் தீவுப்பகுதி மக்கள் கடன்பெறுவது கஷ்டமாயிருக்கிறது. தீவுப்பகுதியில் ஒரு மக்கள் வங்கிக்கிளை திறக்கப்பட வேண்டும்.

வேலணை ஐயனுர்சனசமூக நிலையத்தில் திரு. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலும் திரு. பி. கதிரவேலு உரையாற்றினுர்.

.........

### பொங்கல்...

(1ம்பக்கத்தொடர்ச்சி)

மீதான விசாரணை நடைபெறும்.

கடந்த பத்துநாட்களாக கோவிலில் பொலிசார்இரவு பகலாக காவல்புரிந்து வருகின்றனர். இன்று ஆரம்பமாகும் உற்சவத்தையொட்டி பொலிசாரின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது

கோவிலில் அமைதிக்குப் பங்கம் விளைவிப்பவர்எவராயிருந்தாலும்சரி அவர்களை உடனடியாக கைதுசெய்யும்படி வடபகுதிபொலிஸ் அதிபர் உத்தரவிட்டிருக்கிருர்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு மார்ச்மாதம் 16-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

## இன்றையபலன்

பங்குனி மாதம் 3-ம் திகதி [16-3-70]

**சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை**

**மேஷம்;** பண விவகாரத்தில் நல்ல முன்னேற்றம் காணப்படுகின்றது. புத்திரர்களாலும் புகழுக்கு இடமுண்டு. வீட்டில் சுபகாரியமொன்று இடம் பெறலாம் மற்றவர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்பார்கள்.

**ரிஷிபம்:** ஏமாற்றத்தின் அறிகுறிகள் காணப்படுகின்றன. கொடுக்கல் வாங்கல் விடயத்தில் அதிககவனம் செலுத்த வேண்டும். பெரியவர் ஒருவருடன் கருத்து வேற்றுமை ஏற்படலாம் நாவடக்கம் நன்மை தரும்.

**மிதுனம்:** தொழில் புரியும் இடத்தில் கருத்து வேற்றுமைகள் தோன்றக்கூடும் கொடுக்கல் வாங்கல் மூலம் எதிரியை தேடிக்கொள்வீர்கள், பொருள் விடயத்தில் கவனம் செலுத்தவும்.

**கடகம்:** சொற்சிலம்பம் ஆடுவதன்மூலம் மற்றவர்களைச் சொக்கவைப்பீர்கள். சிலர் தேர்தல் விவகாரங்களில் ஈடுபடலாம் குடும்பத்தில் அமைதி நிலவும் பெரியவர்களுடன் உறவு பெலப்படும்.

**சிம்மம்:** சகோதர வழியால் மனதில் சஞ்சலம் தோன்றக்கூடும். உள்வீட்டிலேயே பூசல் தலைதூக்கும் உஷாராக இரு.

**கன்னி:** கனிவான நினைவுகளில் இன்று ஆனந்தமாக மிதந்து செல்வீர்கள், கல்வித்துறையில் வித்துவத்தன்மை தென்படும். வாகனம் செலுத்துபவர்கள் மக்களின் ஆதரவைப் பெறுவர். சுபதினம்.

**துலாம்:** அறிவுத்தாகம் மேலோங்கிநிற்கும் ஆராய்ச்சிகளில் ஈடுபடுவீர்கள். விருந்தினர் வருகை உங்களுக்கு மகிழ்ச்சியைத்தரும் எதிர்பாராத பணம்கைக்கு கிடைக்கலாம்.

**விருட்சிகம்:** ஏமாற்றலின் தாக்குதலால் அவதிப்படுவீர்கள். பூமிப்பிணக்குகளால் கவலை தோன்றக் கூடும் தொழில் புரியும் இடத்தில் சூழ்ச்சிகள் உருவாகும் சிறுபிணிக்கு இடமுண்டு பொறுமை நன்று.

**தனுசு:** குடும்பவழியால் மனதிற்கு நிம்மதி பிறக்கும். நீண்டநாள் பூமிப்பிணக்கு சமரசமாக முடிவடையும் காதல் விவகாரங்களுக்கும் இடமுண்டு சிறப்பானதினம்.

**மகரம்;** பிரச்னைகள் மேலும் சிக்கலாகும். உணவு விஷயத்தில் பிரியக்குறைவு தென்படும். கூர்மையான ஆயுதங்களுடன் பழகாது இருப்பது நன்று. நலங்களில் அதிக கவனம் வேண்டும்.

**கும்பம்:** உள்ளப்படுதாவில் உவகை கூத்தாடும். உறவினர்கள் உதவுவதற்கு முன்வருவார்கள். பத்திரிகைத் துறையில் தொழில் புரிவோர் பாராட்டுதல்களைப் பெறுவார்கள்.

**மீனம்:** தொழில்புரியுமிடத்தில் செல்வாக்குப் பெருகும். மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும் உல்லாசப் பயணமொன்றுக்கும் திட்டமிடப்படலாம் பொருள்வரவும் உண்டு.

"வாலிபர்கள்

## கிராமத்தின் அபிவிருத்தியில் அக்கறை எடுக்கவேண்டும்'

கொடிகாமம், ஞாயிறு

'வாலிபமுன்னணி தேர்தலுக்காக மட்டும் இயங்கும் இயக்கமாக இருக்கக்கூடாது தேர்தல் முடிந்த பின்னரும் வாலிபமுன்னணி இக்கிராமத்தின் அபிவிருத்தியில்அக்கறை எடுக்கவேண்டும். இப்பகுதித்தேவைகளைப் பூர்த்தியாக்குவதற்கு இம்முன்னணி சார்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்படிப்பகம் எதிர்காலத்தில் ஒரு சிறந்த நூல் நிலையமாக மாறவேண்டும்'

கொடிகாமத்தில் தமிழரசு வாலிபமுன்னணிக்கிளை காரியாலயத் திறப்புவிழாவில் திரு. க. சங்கரப்பிள்ளை பேசும்போது மேற்கண்டவாறு கூறினுர்.

திரு.செ. கந்தசாமி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு.மா.சிவானந்தராசா காரியாலயத்தைத் திறந்துவைத்தார்.

கொடிகாமம் தமிழரசுக் கிளைத் தலைவர் திரு. க. சங்கரப்பிள்ளை மேலும் பேசியதாவது:- உத்தியோகம் பெறுவதற்காகவோ அல்லது சொந்த சலுகைகளைப்பெறுவதற்காகவோ வாவிப முன்னணியை எவரும்பயன்படுத்தக்கூடாது. பொதுவிஷயங்களுக்காகவே அதனைப்பயன்படுத்தவேண்டும், வாலிபர்கள் நமது கடசியில்,கொள்கையில், லட்சியத்தில் பற்றுஉடயவர்களாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் ஒரு சிறந்த சமுதாயத்தை எதிர்காலத்தில் உருவாக்கலாம்.

அற்ப சலுகைகளுக்காக நமது உரிமைகளை விட்டுக் கொடுக்கக்கூடாது. இழந்த உரிமைகளைப் பெறுவதற்காக வாலிபர்கள்ஒவ்வொருவரும் நமது அணியில் திரள வேண்டும். வாலிபர்கள் தான் வருங்காலத் தலைவர்கள், நாட்டின் முதுகெலும்பான வாலிபர்களிடம் தான் எதிர்காலத்தைநிர்ணயிக்கக்கூடிய சக்தி இருக்கிறது. நமது இனத்தையும் மொழியையும் காப்பது வாலிபர்களின் கடமையாகும்.

திரு.மா. சிவானந்தராசா பேசும்போது, எதிர்காலத்தில் தமிழினம் ஏராளமான இன்னல்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதால், தமிழினம் விடுதலை பெற்றுவாழ வாலிபர்கள் ஒன்றுபட்டு உரிமைக்குரல் எழுப்பவேண்டும் என்று கூறினுர்.

திருவாளர்கள்: மு மோகனதாஸ்,க. யோகராசா ஆகியோரும்பேசினுர்கள்.வாலிபமுன்னணிக்கிளைசார்பில்காரியாலயத்தில் ஒரு படிப்பகம் திறக்கப்பட்டது.

### தாகசாந்தி

பல்லவராயன்கட்டு, ஞாயிறு

பல்லவராயன்கட்டு பஸ் பிரயாணிகள் சங்கம் மகாசிவராத்திரியின்போது திருக்கேதீஸ்வரம் சென்ற யாத்திரீகர்களுக்கு முழங்காவில் ஆலய முன்றலில் தண்ணீர் பந்தல்அமைத்து தாகசாந்தி அளித்தது.

## 'சந்தன மரத்தை ஒத்தவர்'

புதுக்குடியிருப்பு, ஞாயிறு

''இலங்கையில் சைவத்தையும் தமிழையும் வளர்க்க வேண்டிப் பலநூற்றுக் கணக்கான சைவப் பாடசாலைகளை ஆக்கி நிர்வகித்து 'மேன்மை கொள் சைவநீதி மேதினியெல்லாம் விளங்க வைத்த சைவப் பெரியார். திரு. சு.இராசரத்தினத்தின் பிரிவு பேரிழப்பாகும். இங்கு வாழும் பல்லாயிரக் கணக்கா மக்களின் வாழ்வில் சைவப்பண்பு சைவப் பொலிவு சைவநீதி விளங்குகின்ற தென்ருல் அன்னுர் ஊர்கள் தோறும் ஆக்கித் தந்த இப்பாடசாலையின் விளைவேயாகும். அன்று அப்பெரியாரிட்ட இவ்வித்தியாலய மூலைக்கல் இன்று எத்தனை கட்டிடங்களாகப் பரிணமித்துக் கல்லூரியாகிச் சைவம் விளக்கி, தமிழ் விளக்கிப் புதுப் பொலிவுடன் காட்சி தருகின்றது. தானழிந்து பிறர்க்கு வாசனையூட்டும் சந்தன மரம் போலத் தமது வாழ்வையே சைவம்வாழ தமிழ் வாழ அர்ப்பணித்த பெரியார் அவர்.''

## பெருந்தகை பிரிந்தனன்

நல்லையில் உதித்த செய்ய
  நாவலப் பரிதி சென்று
ஒல்லையில் அத்த மிக்க
  உலகினை இருளுஞ் சூழ
வில்லியன் ராச ரத்ன
  வித்தகப் பரிதி யொன்று
எல்லையில் ஒளியைக் கான்று
  உவப் பொடு தோன்றிற் றம்மா!

0 0 0

தோன்றவே ஈழ நாட்டிற்
  சொல்லுபல் லிடங்கள் தோறும்
தோன்றின சைவப் பாட
  சாலைகள் தொனிகய தாக;
ஆன்றசை வமுந் தமிழும்
  ஆர்வமோ டுயர நம்மை
ஈன்றநல் லீழ மாதும்
  இருங்களிப் படைந்தாள் அம்ம!

0 0 0

இருங்களிப் படைந்த மாதும்
  ''இனிநமக் கென்ன?'' வென்று
பெருமிதம் அடைந்து மிக்க
  பீடுடன் வாழும் இந்நாள்,
பெரும்பணி புரிந்த எங்கள்
  பேருயர் இராச ரதித்னப்
பெருந்தகை நம்மை விட்டுப்
  பிரிந்தனன் பிரலா பம்மே

— 'முருக சூரியன்'

## நாவலர் போன்ற அஞ்சா நெஞ்சர்

ஒட்டிசுட்டான், ஞாயிறு

'இந்துபோட் மனேஜர்' திரு சு. இராஜரத்தினத்தின் மறைவு குறித்து ஒட்டிசுட்டான் சின்னத்தம்பி வித்தியாசாலையில் அனுதாபம் தெரிவிக்கப்பட்டது. தலைமை ஆசிரியர் திரு பெ மயில்வாகனம் தலைமையில் நடைபெற்ற இவ்வனுதாபக் கூட்டத்தில் ஆசிரியர் க. சத்தியானந்தசிவம் பேசுகையில் மறைந்த பெரியார் திரு. இராஜரத்தினம் நாவலருக்குப்பின் சமுதாயத்தில் கல்வி, சமய மறுமலர்ச்சியை உண்டாக்கியவரென்றும், நாவலரைப் போன்ற அஞ்சா நெஞ்சமுடையவரென்றும் அவர் தொண்டால் லட்சக் கணக்கானவர்கள் கல்வியறிவு பெற்றனரென்றும், இதன்மூலம் எத்தனையோ ஏழைகள் வாழ முடிந்ததென்றும் சொன்னுர். மறைந்த பெரியாரின் ஆத்மசாந்திக்காக மௌனப் பிரார்த்தனை நடைபெற்றது.

## சைவ உலகுக்கு நஷ்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

'ஏழைகட்கு எழுத்தறிவு பெற எத்தனையோ கல்வி நிலையங்களை ஆக்கி அரும் பணி செய்த பெரியார் சு. இராசரத்தினம் மறைவு சைவ உலகத்திற்குப்பெரும் நஷ்டமாகும்,' என பளை மகாவித்தியாலயத்தில் நடந்த தெய்வப் பிரார்த்தனைக் கூட்டத்தில் உரையாற்றிய சைவப்புலவர் சங்கீதபூஷணம் அ. கி. ஏரம்பமூர்த்தி குறிப்பிட்டார்.

ஆத்மசாந்திக்காக பிரார்த்தனை நடைபெற்றது. திரு. எஸ். சாம்பமூர்த்தி ஆசிரியரும் பேசினுர்.

## மாட்டு வண்டி சவாரிப்போட்டி

சுழிபுரம், ஞாயிறு

மூளாய் வாலிபர் இயகக்தினராதரவில் பொன்னுலை கிருஷ்ணன் கோவிலுக்கு அருகாமையிலுள்ள மான் பாய்ந்த வெளியரங்கில் இம் மாதம் 22ம்திகதிமாட்டுவண்டிச்சவாரிப்போட்டி ஒன்று நடைபெறவிருக்கிறது.

திரு.ரி.கிருஷ்ணர் தலைமையில்நடைபெறவிருக்கும் இப்போட்டி மூன்று பிரிவுகளாக நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org